ஓம்

விநாயகநம

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

UNIVERSITY OF SRI LANKA • JAFFNA CAMPUS • RECEIVED • PERIODICALS DIVISION

இதழ் - 2 காலயுத்திவருஷம் புரட்டாதி மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை [29-9-1978] சுடர் -2

## நம் கிளைகள் கெடாது வாழ வழிவகுக்க நீவிர் சிவனை நன்குபோற்றுமின்கள்

நமது இளைஞர் சமுதாயம் மிலேச்சபழக்கத்திற்குஉடந்தை யாகிப் பெரியோரைக் கனம் பண்ணுது கடவுள் நம்பிக்கை யிலாது வேடிக்கையும் விண்ணுணமும் மிகுந்து தமக்கும் பிறர்க் கும் பிரயோசனமிலாத ஒரு வாழ்வை முன் எக்காலமும் இல் லாதபடி இன்று பெற்றுக் கொண்டது.

வீர கன்னிகை எனப்படுவோரும் விபரீதப் போக்குகளும் அடக்கமிலாத ஆடம்பர வாழ்வும் பெண்களாக இருந்தும் தமக் குறற உயர்வாம் சீலங்கள் ஒழுக்கங்கள் இன்றி மிருகங்கள் போல் கண்டபடி நடக்கின்றனர்.

இவர்களுடைய நடத்தையை நோக்கினுல் இவர்களும் சிவ நெறிக்குரியவரோ? இல்லையே என்ற சந்தேகம் எழுகின்றது. இந்த குறைபாட்டுக்கு காரணம் யாரெனப் பார்க்கப் போனுல் முதற் கண் இப்பிள்ளைகளைப் பெற்ற தாயும் தந்தையும் ஆசி ரியருமே காரணமாகின்ருர்.

திருஞானசம்பந்தப் பெருமான் திருவாக்கின் படி நமது பிள்ளைகள் பேரப் பிள்ளைகளின் அலங்கோல நிலைக்கு நாமே காரணமாகின்ருேம் என்பதனை தமது இந்தப் பதிகத்தில் நம் கிளை; கிளைக்கும் கேடுபடாத திறத்தை சிவன் அருள்வான் என் கின்ருர், ஆதலின் அப்பதிகத்தை கீழே தருகின்ருேம். அதன் உண்மையை நன்குணர்ந்து சிவனை வழிபட்டு அவனருளால் சற் புத்திரரைப் புத்திரிகளைப் பெற்று நல்வாழ்வு பெறுங்கள்.

நெறியிலார் சொல்லால் மிகு இடுக்கண் உங்கட்கு வரும் என இப்பதிகத்து திருஞான சம்பந்த சுவாமிகள் பொதுவாக எச்சரிக்கின்ருர். ஆகவே உண்மை நின்ற சிவனடியார்களை அல் லாது காசு வேண்டும் பிரசங்கியை சித்துக்காட்டி மருட்டும் சிற்றுணர்ச்சி உடைய சுவாமிகளை பின் பற்றி வணங்கிடும் போது தயவு செய்து கொஞ்சம் சிந்தித்துச் செயல் படுங்கள்.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறம்அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.

மடமையால் நிரம்பிய என் நெஞ்சே நான் சொல்வதைக் கேள்! நாட்கள் வேகமுடன் போகின்றன; காலமும் தேய்கின் றது; உடலும் தேய்கின்றது. ஆதலின் நாட்கள் அவமே போ காமே நஞ்சணியும் கண்டமுடைய எம்பிராற்கே ஆளாகும் படி அன்பு செய்வோம். அன்றியும் சிவனுடைய நாமமே என்றும் நீ கேளாய். ஏன் அப்படிச் சொல்வேன் என்ருல் உனது கி ளைகள் பெருகுவதற்கு வழியாக உள்ள செயல் அது. உனகி ளையாம் புத்திரர் அவர் புத்திரர் அனைவரும் கேடு படாத நிலையினை அவன் அருள் செய்வான். உனக்கு வரும் கோளா ய துன்பம் நீக்குவான் அவன் தான் திருக்கோளிலியில் எழுந்தருளிய எம் பெருமான் சிவன் (திருக்கோளிலி ஓர் சிவா லயம்) 1

ஆடரவத் தழகாமை அணிகேழற் கொம்பார்த்த
தோடரவத் தொருகாதன் துணைமலர்நற் சேவடிக்கே
பாடரவத் திசைபயின்று பணிந்தெழுவார் தம்மனத்தில்
கோடரவம் தீர்க்குமவன் கோளிலியெம் பெருமானே.

ஆடுகின்ற பாம்புடன் அழகிய ஆமை ஓடு நல்லணியாம் பன்றிக் கொம்பு இவை அணிந்து ஒரு திருக்காதில் தோடும் ஒலிக்கின்றவன். அவனது துணையான மலர்ச் சேவடிக்கே பாட லின் இசையுடன் பயின்று பாடிப் பணிந்து எழும் பெருமக் களது மனத்தில் கோணுகின்ற குறையாகும் அவலம் யாவும் நீக்கும் அவன் திருக்கோளிலியில் அமர்ந்த எம்பிரான் சிவனே. 2

நன்றுநகு நாண்மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய லுற்றவன்தன் ஓங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர் கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர் பொன்திகழுங் கோளிலியெம் பெருமானே.

நன்மை தருகின்ற நல்ல மலரால் நல்ல இருக்குவேத மந்திரங் கொண்டு உள்ளம் ஒன்றி வழிபாடு செய்து நின்ற மார்க்கண்டன் என்னும் பிள்ளையின் ஓங்கிய உயிரின் மேலாக கோபமுடன் வருகின்ற இயமனுடைய உயிரை நீக்கி மார்க் கண்ட முனிவனுக்கு அன்று இறவாமை அளித்தான் எம் கட வுள். அவன் தான் கொன்றை மலர் பொன் போல் திகழ விளங்கும் திருக்கோளிலி என்னும் தலத்தமர்ந்த பெருமானே. 3

வந்தமண லால்இலிங்கம் மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தை செய்வோன் தன்கருமந்தேர்ந்து சிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே.

இயல்பாக மண்ணி ஆற்றங்கரையில் வந்த மணலால் இலிங் கம் அமைத்து; தாம் மேய்த்த பசுக்களின் பாலினைக் கறந் து எம்பிரானது சிவலிங்க மேனிக்கு பாலாட்டி நிற்க சிந்தை செய்து நின்ற பிராமணப் பிரமச் சாரி விசாரசருமன் மேல் குறை கண்டு அவர் செய்த பூசனையை காலால் சிதைத்திட் ட தந்தை எச்சதத்தனை வாளால் வெட்டி வீழ்த்தலும் அது கண்டருளி அப்பிள்ளையான விசாரசருமனுக்கு சண்டீசன் என்னும் நாமம் சூட்டியருளி தன் சடை மீது அணிந்த கொன்றை மலர் மாலை எடுத்து அப்பிள்ளைக்கு கொடுத்த கடவுள் அவன் கோளிலி என்னும் தலத்தமர்ந்த பெருமானே. 4

ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலும்நற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளும் நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபதம் ஈந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே.

வஞ்சனையால் நிரம்பிய தன் மனத்தை மாசுறுத்தும் ஐந்து புலன்களையும் தொழிற்படா வகை மௌனியாகி இருந்து ஒடுக்கி; நித்தலும் அகவழிபாட்டால் நஞ்சினை அமுது செய்தருளும் எம் பெருமானே என நினைந்து தியானம் செய்து போற்றும் தருமன் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்னும் ஐந்து பேரில் ஒருவனான அருச்சுனனிற்கு பாசு பதப் படை கொடுத்து மகிழ்ந்தான். அவன் யாரெனில் கொஞ்சும் மொழி பயிலும் கிளி மஞ்சின் மீது விளையாடும் கோளிலி எனும் தலத்து அமர்ந்த பெருமானே. 5

தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி அங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே.

தன்னுடன் கூடவே பொருந்தி உடன் இருந்தும் காண முடியாத கடவுளை தன் உயிரின் விருத்தியான ஐந்து புலன்களையும் ஒடுக்கி; கண்ணுதற்பரனே நீயே துணை என்று ஆதரித்து வழிபட்டுப் போற்றி நிற்கும் நமி நந்தி அடிகளுக்கு அருள் நல்கிய பெருமான்; தலமைப் பாடுடைய மலர்கள் மலர்ந்தெழுகின்ற சிறப்புடைய திருக்கோளிலி என்னும் தலத்தமர்ந்த பெருமான் அவனே! 6

கல்நவிலு மால்வரையான் கார்திகழு மாமிடற்றான்
சொல்நவிலும் மாமறையான் தோத்திரஞ்செய் வாயினுளான்
மின்நவிலுஞ் செஞ்சடையான் வெண்பொடியான் அங்கையினில்
கொன்னவிலுஞ் சூலத்தான் கோளிலியெம்பெருமானே.

கல் போல் சிறந்த வெள்ளி மலையை உடையவன்; மேகம் போல் திகழும் கண்டமுடையவன்; சொல்வடிவாக மலர்ந்த பெருவேத முணர்ந்தவன். தோத்திரம் செய்வார் வாயில் உள்ளான். மின் போல் ஒளிரும் செஞ்சடையுடையவன்; வெண் பொடியான நீறணிந்தவன்; அழகிய திருக்கையில் உயர்வாகப் பேசப்படும் படையான சூலம் உடையவன் திருக்கோளிலியில் அமர்ந்த பெருமான் அவனே. 7

அந்தரத்தில் தேரூரும் அரக்கன்மலை அன்றெடுப்பச்
சுந்தரத்தன் திருவிரலால் ஊன்றஅவன் உடல்நெரிந்து
மந்திரத்த மறைபாட வாளவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக் கோளிலியெம் பெருமானே.

வானத்தில் தன் தேரை செலுத்தும் இராட்ஷதன் இராவணன் சென்று தன் தேரை கைலைமலையுடன் முட்டவிட அதனுல் அம்மலை தன் வழிக்கு இடைஞ்சலாயது என்று தேரை நிறுத்தி தான் சென்று கைலைமலையை அன்று எடுத்தலும் அது கண்டு சுந்தரமுடைய தன் திருவிரலால் ஊன்றலும் அவன் முதுகு நெரிபட்டு உடல் நசுங்கிப் பதைபதைத்து மந்திரமான வேதகானம் பாட முக்கோடி வாழ் நாளும் வாளும் ஈந்த பெருமான் குளிர்மை விளங்கும் கண்ணிப்பிறை சூடிய திருக்கோளிலியில் அமர்ந்த எம் பெருமானே. 8

நாணமுடை வேதியனும் நாரணனும் நண்ணவொணாத்
தாணுஎனை யாளுடையான் தன்னடியார்க் கன்புடைமை
பாணன்இசை பத்திமையாற் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணல்இளம் பிறைச் சென்னிக் கோளிலியெம் பெருமானே.

ரோசம் மிகுந்து ஆணவம் மிகுந்த அந்தணனுய பிரமனும் நாராயணக் கடவுளும் சென்று அடியும் முடியும் சேரமுடியாத சோதிவடிவானவன். என்னை முற்றிலும் ஆளுடையவன். தனது அடியார்களுக்கு அன்புடைமையாக இருக்கின்றான் எம்பெருமான் என்பதை உணர்ந்த பாணனுர் இசையை எம்பெருமான் மேல் பத்திமை உடன் பாடுதலும் அப்பாணனது வறுமை கண்டு பரிவுடன் செல்வம் கொடுத்தவன். அவன் தான் கோணிய இளம்பிறை சூடிய சடையுடையவரும் திருக்கோளிலி என்னும் கோவிலில் குடிகொண்ட எம்பெருமானே. 9

தடுக்கமருஞ் சமணரொடு தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரும் மொழிகேளாது ஈசனையே ஏத்துமின்கள்
நடுக்கமிலா அமருலகந் நண்ணலுமாம் அண்ணல்கழல்
கொடுக்ககிலா வரங்கொடுக்குங் கோளிலியெம் பெருமானே.

தாங்கள் உயர்ந்த துறவிகள் என்பதைக் காட்ட ஆடையின்றிப் பாயால் தம்முடலை மூடிய சமணருடன் தர்க்க சாத்திரம் பேசும் ஏனையோருடைய சொல் உங்களுக்கு இடுக்கணை வருவிக்கும். ஆதலால் அவர் மொழிகளை நீர் கேளாது சிவனையே போற்றுமின்கள். அத்தன்மையால் நடுக்கம் பயம் ஏதும் இலாத தேவ உலகை நாம் சென்று சேரவும் முடியும். எம்பெருமான் சிவனுடைய திருவடி வழிபாடு எவராலும் கொடுக்க முடியாத வரங்களைக் கொடுக்கும். அவன் தான் கோளிலி என்னும் தலத்து அமர்ந்த பெருமான் சிவன். 10

நம்பனைநல் அடியார்கள் நாமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச்சம்பந்தன் வண்தமிழ்கொண்டு
இன்பமர வல்லார்கள் எய்துவர் ஈசனையே.

எமது பெருமானை; நல்லநெறி நின்ற அடியார்கள் நம்முடைய பெரும் பொருள் நமது தஞ்சம் என நம்பி இருக்கும்; பூங்கொடியின் சாயலுடைய உமைஅம்மையாரின் பாகமுடையவனை; எழில் உடைய திருக்கோளிலி என்னும் தலத்து அமர்ந்த எம்பெருமானை; வாசனை கமழும் குளிர்ந்த சோலையுடைய சீகாழிப்பதி வந்த திருஞானசம்பந்தனுடைய அருளின் வண்ணம் உடைய தமிழ் கொண்டு இன்புறப் பாடி ஏத்திட வல்லார்கள் சிவனைச் சேர்வார்கள். 11

**நாடு உய்ய வேண்டின் ஆலயங்களில் பக்தி நெறியே பரவ வேண்டும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ நீதியின் மாண்பிலாதாரை நாம் போற்றுதல் செய்யோம்.

# தீபத்தின் நோக்கம் பற்றி விளக்கம் சில.

## வேடம் பெரிதாகக் கோலாகலமாக இருக்கலாம். பேச்சுப் பிடித்தமாக இருக்கலாம். அவை யாவற்றிலும் அவர் நடந்திடும் செயலே அவதானிக்கப்படுவது. தெய்வ நெறியுடையார் உண்மைக்கே முதலிடம் கொடுப்பார். சைவநீதியில் சனமருள் சாத்திரமருள் இவற்றிற்கு இடமில்லை.

*வாரியாருக்கும் உம் பேப்பர் கொடுத்தீரோ! அல்லது அவர் எங்காகிலும் உம்மைக் கண்டாரோ!*

இப்படிக் கேட்டார் ஒரு நண்பர். அவர் அருகாமையில் உள்ள அடைவு கடையில் கணக்காளராகவும் பங்காளராகவும் உள்ளவர். அவரிடம் நட்புரிமையால் சில கால் கலந்துரையாடச் செல்வதுண்டு. அன்ெருரு நாள் சென்ற நேரம் அவர் என்னை நோக்கி ''வாரியாருக்கு உங்கள் பேப்பர் கொடுத்தீரோ'' என அந்த அன்பர் மிகு அக்கறையுடன் கேட்டார்.

ஒரு நாளும் இல்லாத வகை இவர் இப்படிக் கேட்டலும் நான் முதல் கொஞ்சம் திகைத்துப் போனேன். ஏன் என்ருல் அவருடைய நிலையையும் எனது தீபத்தில் நன்கு தெரியக் காட்டியிருந்தவன். அதனுல் எதாகிலும் சர்ச்சையை அவர் தனது பிரசங்கத்தில் சொல்லியிருப்பாரோ என நினைந்து; ஏன் இப்படிக் கேட்கிறீர்கள். நான் சந்திர தீபம் வாரியாருக்காகவோ வாரியார் வருகைக்காகவோ வெளியிடுவதில்லை. எனது தீபத்தைப் பற்றி அவர் அக்கறை கொள்ள வேண்டியதுமில்லை. நான் அவரிடம் போய் எனது பத்திரிகையைக் காட்ட வேண்டிய அவசரமோ அல்லது அவரால் ஒரு மதிப்பை நான் பெற வேண்டிய நிலையிலோ நான் இல்லை. நான் யாருடைய மதிப்பையும் பெற எண்ணுவதில்லை. இன்று கந்தபுராணம் பெரிய புராணம் இரண்டினையும் நன்கு கற்றுத் தெளிந்து அவற்றின் சீலங்களையும் நன்கு உணர்ந்து எனது யாழ்ப்பாண மக்களுக்கு அவற்றின் நல்ல தாற்பரியங்களை எடுத்துக் காட்டுபவன். அதுவும் அதனை வாசித்து உணரும் மக்கள் நல்நிலை யடைந்திட இவற்றைச் செய்பவன். எனது பத்திரிகை ஒரு தருமம். அதன் முழு நோக்கமும் உண்மை நின்ற சிவனடியார்களைப் போற்றுவதாகும்.

வாரியார் ஒரு பிரசங்கியார். அவருடன் இன்று உள்ள பிரசங்கிமார் பேச்சாளர் வில்லுப்பாட்டுக் காரர் பொப்பிசைக்காரர் இவர்கள் யாரும் ஒரே வருணத்தவர். இவர்கள் எவரும் சீலமுடைய சிவனடியார் என்று நான் சொல்லேன். இவருடைய நடத்தையை நான் நன்கு அறிவேன். இவர்களால் இன்று கோவிலின் நித்திய நைமித்தியக் கிரியைகள் முட்டுடன் நிகழ்கின்றன என்பது என் மனத்துணிபு.

இன்று பிரசங்கிமார் எத்தனையோ பேர் உண்டு. அவர்கள் எல்லாரும் இனிக்கப் பேசிக் கனக்கக் கத்தி உரக்கப் பேசி தாளம் தட்டி மேளம் கொட்டிப் பக்கத்திலும் ஒரு குட்டியை வைத்து வீணை மீட்டு ஆலோலம் பாடினுல் பின் ஐயோ! வீட்டில் ஒருதரும் இராது மருண்டு எழுந்து எணேய் மச்சாள் பிரசங்கமாம் நீ போகயில்லையே! ஓமெணை மச்சாள் நீ போறியேணை நானும் வாறன் உண்ணேணை விட்டுட்டுப் போடாதை. பிறகு வீட்டிலிருந்த குமரும் மெல்ல அந்தச் சாட்டில் பிறகு பொடியள் பொட்டையள் குஞ்சு குருமன் உவாத்தியார் அம்மா அவரின் தோழா தோழியர் பிறகு கூட்டணி ஒன்று காரில் ஒரு டிராக்டரில் ஒரு லொறியில் ஒரு மாட்டுவண்டியில் இப்படியாக வாரியார் பிரசங்கத்திற்கு மழைபொழிந்தால் கழனிகங்கை போல் கரை பெருகி ஓட்டம். தம்பிகள் சைக்கிளில் முன்னுக்கு ஒரு தம்பியை இன்னெரு தம்பி ஏற்றியோடி குறுக்காய் வெட்டியும் ஓடும்போது விழுந்தடித்தாலும் எழுந்தோடி தங்கச்சியளும் இந்தச் சாட்டில் சயிக்கிளில் ஓடி; படுக்கையில் கிடக்கும் கிழடும் ஒருக்கால் எழுந்து என்னென்ருலும் நான் ஒருக்கால் போகப்போறன். எடிபிள்ளை கொஞ்சம் சுடுதண்ணி தா. முகம் கழுவிவிட்டுப் பிரசங்கத்திற்கு மட்டும் போவேனென பல பல விதமாகச் சென்று நிறைந்து கூடிக் களித்து கும்பிட்டு மகிழ்ந்து காணுதிருந்தவரை அங்கு கண்டு களித்து உரையாடி கொஞ்சுமொழி பல பேசி பிரசங்கம் கேட்டு வீடு சுகமாகச் சேர்வர்.

பிரசங்கம் கேட்டுத் திரும்பும் கார் பவனி வேகம் கொண்டு ஒன்றை ஒன்று முன்னெடுக்க ''ஓவர் ரேக் பண்ணும் பொழுது'' எத்தனை உயிரை அடித்தால் என்ன அது பற்றி அக்கறையிலாது ஒரே வீச்சு. இந்தச் சங்கடத்தில் ஒரு நாள் இரவு சில உயிர் அரும்தப்பு. அதையும் நேரில் காணக் கூடியதாக இருந்தது.

இவ்வளவு பேரும் பிரசங்கத்திற்கு போனுர்கள். அவர்களில் சிலரைக் கேட்டேன், எப்படிப் பிரசங்கம். என்ருல் ஏதோ வாரியார் வந்தார் வடிவாய்ப் பேசினுர் கேட்க னிமையாய் இருக்கு. பல விடயமும் பேசினுர். என்ன நீங்கள் தெளிந்தீர்கள் என்ருல் பிறகு என்ன பாருங்கோ கந்தபுராணம் தான் பேசினவர். வடிவாய்ச் சொன்னுர் என்றே பதில் வந்து கேட்ட நீர் என்ன ஆனீர் என்ருல் அது தானே மெல்ல மெல்லத்தானே திருந்திறது. திருந்திறவை திருந்துவினம் திருந்தாதவை திருந்தாயினம். உவ்வளவு சனத்தில் நாலுபேராதல் திருந்தாயினம் என்றே தன்னை நீக்கி பிறர் திருந்துவதைப் பற்றி வாரியார் பிரசங்கத்தை கேட்கும் ஆவலுடன் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்த எமது நண்பரொருவர் மொழிந்து விட்டு மிக அவசரமுடன் பிரசங்கம் கேட்கப் போயினர்.

இன்னுமொருவரை வாரியார் பிரசங்கம் கேட்டு என்ன தெனிந்தீர் கந்தபுராணம் பேசினுராம் அதன் சீலம் விளங்கினீரோ என்ருல் இதென்ன நீங்கள் இப்படிப் பேசிறியள் உங்களுக்கு அவற்றை பிடிக்காட்டில் இவ்வளவு சனமும் ஓடிவருகுதே. அந்தாளிட்டை ஏதோ இருக்கிற படியால் தானே இவ்வளவு பேரும் வந்து போனம். அவையள் எல்லாம் பேயர் என்று நினைச்சுக்கொண்டியள் பதில் இப்படிப் பல திறமாக வந்து கொண்டது. வாரியாரும் பெருவாரியாகப் பதமறிந்து பேசிச் சபை அறிந்து பாடி விடயத்தை நன்கு நடத்தினுர். பிரசங்கம் பாட்டுக் கச்சேரி என்ருல் அதற்கு வழிபாடு அதாவது கோவில் சென்று வணங்குவதிலும் மக்கள் முக்கியத்துவம் கொடுக்கின்ற நிலையை நேரில் கண்டபோது தான் சனமருள் சாத்திரமருள் என மக்களைப் பீடிக்கும் மயக்கம் பற்றி முன்னை நாதாக்கள் மொழிந்த கருத்தின் அருமை பற்றி நினைந்து எனக்குள் சிரித்துக்கொண்டேன்.

வாரியார் பிரசங்கம் நடத்துகிருர். சனம் வந்து சரியுது குவியுது சரி. அதே கோவிலில் முருகனுக்குச் செய்யும் வழிபாட்டுக் கிரிகைகள் என்னுயின நீரே பார்த்தீரே! எம்பெருமானை திருவிழா எழுந்தருளப் பண்ணி உள் வீதி உலா வந்து அவரையும் இருத்தி வாரியாரது பிரசங்கத்தை நீரும் கொஞ்சம் கேளும் என்றல்லவோ அத் திருப்பணிச் சபையார் வைத்திருப்ப வாரியார் வருகைக்காக முருகனும் காவல் இருந்தானே! உண்மையாக இறைவன் என்று எழுந்தருளியாக வரும் மூர்த்தியைக் கருதினுல் வாரியார் பிரசங்கத்திற்காக முருகனைக் காவல் வைக்கலாமோ? அவரது உலாவை இடையில் நிறுத்தலாமோ? தயவு செய்து நீரும் ஒரு அறிவாளி சொல்லும். பெரியபுராணத்தை நீர் நன்ருகப் படித்தால் இப்படியாக ஒருவரது பேச்சுக்கோ, பாட்டுக்கோ ஆகவேண்டி திருவீதி உலா வரும் சுவாமியைக் கீழ் இறக்கி வைத்துப் பின் தமது ஆடம்பரங்களைச் செய்ததாக எங்காகிலும் காண மாட்டீர். கொக்குவில் மேற்கில் பல படித்த, பட்டம்பெற்ற, பாராட்டும் பெற்றவர் உண்டு. அவர்கட்கு இது எப்படிப் படுகின்றதோ தெரியவில்லை. அவர்களும் வாரியார் பேச்சுக்காகச் சனம் வந்து குவிவதற்காக இறைவனது மாண்புடைய உலாவை மட்டுப்படுத்தலாம், குறைக்கலாம, கூட்டலாம் என நினைக்கின்றனரோ எனக்குத் தெரியாது என்று கூறி எனக்கும் வாரியாருக்கும் ஏதும் தொடர்பு எந்நிலையிலும் இருக்கவில்லை. நான் அவரைப் பார்ப்பதற்கு விரும்பவும் இல்லை; எனக்கு அது வேண்டியதும் இல்லை. அது சரி நீர் இப்ப என்னை இப்படிக் கேட்டதற்கு ஓர் காரணம் உண்டு. அது என்ன? இனித் தாமதமின்றி உண்மையைச் சொல்லும் என்றேன்.

அப்போது எனது நண்பர் என்னை நோக்கி நீங்கள் சொல்வது சரி. அதை நான் மறுக்கவில்லை அதுவுமன்றி அப்படியாக உங்களைப் பற்றியோ அல்லது உங்கள் பத்திரிகையைப் பற்றியோ வாரியார் தனது பிரசங்கத்தில் என்ருவது வார்த்தை சொல்லவே இல்லை. கடந்த பத்து நாட்களுள் வாரியாரது பிரசங்கத்தை ஒழுங்காகக் கேட்டனுன். ஆனுல் இந்தப் பத்து நாளும் வாரியார் வேறு ஏதோ விதமான பாணியில் பேசிக் கடைசி நாளான இராத்திரி மட்டும் தனது போக்கை மாற்றி உண்மை வழியின் சில கருத்துக்கள் வெளியிட்டார். அதை நாம் உணரக் கூடியதாக இருந்தது. அதனுலே எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. உங்களைக் கண்டால் வாரியாரது கொள்கை மாற்றத்திற்கு காரணம் உங்கள் பத்திரிகையோ எனக் கேட்க வேண்டுமென்று நினைந்திருந்தேன்.

நேற்று இரவு பேசின பேச்சில் எவ்வளவோ வித்தியாசம் உளது. இராத்திரிப் பேச்சில் உங்களது பேப்பர் பாணியே பிடித்துப் பேசினுர். அப்போதுதான் நான் ஒருகால் வாரியார் உங்கள் சநதிரதீபத்தை வாசித்துருப்பாரோ?. சரி சரி வாரியாரும் உங்களுக்குச் சார்பாய் வந்திட்டார். பிறகு என்ன என நினைத்தேன். அந்தப் பேச்சு உண்மையில் அப்படி இருந்தது என்று தனது இயல்பான சிரிப்புடன் என்னை நோக்சி மொழிந்தார். நானும் கூடவே சிரித்துக் கொண்டு இதென்ன விந்தை எனது பேப்பர் பாணியில் எப்படி வாரியார் பேசுவார்? என்ன மாதிரி அது தயவு செய்து வேடிக்கை பண்ணுது உண்மையைச் சொல்லுங்கள் என்றேன். அப்போது அவர் என்னை நோக்கி இங்கு பாருங்கோ நீங்கள் உங்கள் பேப்பரில் எதற்கு முதலிடம் கொடுக்கிறீர்கள்?. கடவுளிடம் பத்திமை அன்புமூலமாகத் தான் அருளைப் பெறலாம் என்று வலியுறுத்திப் பேசுகின்றீர்கள்.

அதைப் போல் தான் வாரியாரும் இந்தப் பத்து நாளும் பேசாத ஒரு உண்மையை இராத்திரி மட்டும் சொன்னுர். இவ்வளவு நாளும் தனது பெருமை தன்னை வரவழைத்தார் பெருமை பிரபுக்கள் பெருமை அவர் அப்படி இவர் இப்படி என்றெல்லாம் உசத்திப் பேசி அவர் அப்படித் திருப்பணி இவர் இப்படித் திருப்பணி என்று பலரையும் பாராட்டிப் பேசுவார். ஆனுல் நேற்று அதை எல்லாம் நிறுத்தி விட்டு ஒரு சொல்லில் நீங்கள் ''பொன்னுல் கோபுரம் கட்டினுலும் கடவுள் வரார் ஆனுல் அழுதால் வருவர்'' என்று சுருக்கமாக உங்கடை வழியைத் தான் அவரும் சொல்லியிருக்கிருர் விளங்கவில்லையோ? பிறகு நீங்கள் ஏன் வாரியாரில் குறை பிடிக்கப் பார்ப்பான் என்று கூறிச்சிரித்தார்.

நான் சொன்னேன் ஐயோ கடவுளே நான் அவரில் குறை எங்கு பிடித்தேன். அவர் சினிமாவில் நடித்தவர் என்ருல் அது குறையோ இல்லை. அவருடைய பிரசங்கத்தை முன்பு ஒரு நாள் கேட்டனுன். இராமாயணம்பற்றி வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலில் பிரசங்கம் செய்தவர். அப்பொழுது ஒரு கட்டத்தில் ''சாம்பவன் தனது தண்டைத் தூக்கி நின்று'' அப்படி ஒரு அசைவுடன் பேசினுன் என்று தானும் அசைந்து காட்டினுர். அதைக் கேட்டிருந்த சனம் அத்தனையும் சிரித்தது. இங்கும் மெல்லிய வேடிக்கைகள் நடவாமல் இருக்கவில்லை. குழந்தைகளுடனும், பெண்களுடனும், மற்றுமெல்லோருடனும் வேடிக்கை நடிப்பாகவே பேசயாருக்குப் பிடித்தம் வராது.

இதென்னையா ஒரு வில்லுப் பாட்டுக்கு எத்தனை சனம் கூடுது. ஒரு வில்லுப்பாட்டைக் கேட்டு மூன்று ஆசிரியர்கள் விழுந்து உருண்டு அவர்கள் சிரித்த அருமருந்தன்ன காட்சியை நான் நேரில் கண்டனுன். நடிப்பிற்குத் தமாஷ் கொஞ்சம் விடயம் கொஞ்சம் பாட்டுக் கொஞ்சம்

ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளம் கொஞ்சம் பக்கவாத்திய ஆவர்த்தனம் கொஞ்சம் கொஞ்சமாக அமைந்தால் அப்பாடா! அது எந்த உள்ளத்தையும் வசீகரிக்குமே. ஆகையால் பிரசங்கமும் நாடகம் அல்லது சினிமாப்பாணியில் அமைந்தால் தானே மக்கள் விரும்புவார்கள். வாரியாருக்காக வந்து குவியும் கார், சைக்கிள், பெண் ஆண் லொறி, டிராக்டர் எல்லாம் அவரது பேச்சின் இனிமைக்காக சுவைக்காக வந்தனவே ஒழிய வேறு எதற்காக வந்தனர்? ஆகவே இதோ பாருங்கள் எமது யாழ்நகரில் எத்தனையோ சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. எவ்வளவு மக்கள் தினம் தோறும் அதற்குப் போய் வருகின்றனர். அங்கே படம் பார்த்துப் பார்த்து இவர்க்கு அலுக்கின்றதா? இல்லையே; பாமரமக்களும் பார்த்து மகிழ்ந்து கொண்டாடும் ஒரு சினிமாப்பாணியில் வாரியார் பேசுவதும் மக்கள் விரும்புவதும் இயல்பு தானே? அதை முறையற்றது என்று நான் சொல்லவில்லையே! ஆனுல் சினிமா உங்கட்கு நல் நிலையை எக்காலத்தும் உருவாக்கித் தராது. வேடிக்கை உங்கட்கு நல் வாழ்வைத் தேடித் தராது. ஆதலால் கோவிலில் இந்த மாதிரி வேடிக்கைகள் கேளிக்கைகள் மக்களால் நன்கு விரும்பப் பட்டாலும் கோவில் புனிதத்தைப் பாழாக்கும். அருளைப் பெருக்காது இருளைப் பெருக்கும் நாட்டில் பகையை, இடரை, கொள்ளையை, கொலையைப் பெருக்கும் என்ன முன்னைப் பெரியோர் சொல்லி வைத்த பாடல்களின் கருத்துணர்ந்து தெளிந்தும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நமது நாட்டில் இருந்த நன்மைகளையும் இன்றிருக்கும் சூழ்நிலையில் நமக்கு ஏற்படும் அல்லல்களையும் உணர்ந்து சொன்னேன் அன்றி யாரையும் அவமானப் படுத்தவோ வசைமொழியவோ குறைகாணவோ நான் முற்படவில்லை. இது நலமுடையதல்ல என்று சொன்னுல் அது அவரை அவமானப் படுத்தல் என்றதல்ல. ஒருவர் ஒரு செயலைச் செய்கின்ருர். செய்கின்ற செயலின் விளைவை உணரும் ஒருவர் இந்தச் செயல் நன்றல்ல என்ருல் அவரில் குறைகாண்பதோ? இல்லையே நீரும் என்மீது வீண்பழி சுமத்துகின்றீரே என்றேன். நான் சொல்வது தவருக மூடநம்பிக்கையாகக் கருதப்பட்டால் நவீன காலத்து மக்கள் தம் செயலை செய்வதற்குத் தடுக்கப்போறேனு? அல்லது அவர் பிழைப்பைக் கெடுக்கப் போகிறேனு? இல்லை! அப்போது அவர் என்னை நோக்கி நான் உங்களை வாரியாரைக் குறை சொன்னனியள் என்று சொல்ல வரவில்லை. ஏதோ உங்கடை பத்திரிகையை வாரியார் பார்த்தாலும் பாரா விட்டாலும் நேற்று அவரை உங்கள் பக்கம் திரும்பப் பண்ணிவிட்டது என்ருர். என்ன காரணம் வாரியார் இப்படிப் பேச வைத்தது என்று விளங்கவில்லை. ஒருவேளை நான் போறனுன் இனி உள்ளதைச் சொல்லிப் போட்டுப் போவம் என்று தான்''பொன்னுல் கோபுரம் கட்டினுலும் கடவுள் வரார் அழுதால் தான் வருவார்'' என்றபடி சொன்னுரோ என்னவோ அதன் தன்மை எனக்கு விளங்கவில்லை. ஏனென்ருல் நான் வாரியாற்றை பிரசங்கம் ஒழுங்காய்க் கேட்டனுன். இவ்வளவு நாளும் ஏதெதோ சொல்லி வந்து நேற்றுக் கொஞ்சம் உண்மை வழிக்குத் திரும்பினுர். அப்பொழுது தான் அந்த நேரம் உங்கடை நினைப்பு எனக்கு வந்தது. இது விளங்கவில்லையோ என்ருர் என்நண்பர்.

நான் சொன்னேன் எனக்கும் உது வியப்பாகத்தான் இருந்தது: ஏன் என்ருல்; வாரியார் பேச்சு எனக்கும் நன்கு விளங்கும். உங்கட்கு நேற்று இரவு நடந்த வேடிக்கை சொல்லுகின்றேன். நான் இரவு பத்து மணிக்கு மேலாக வீணியவரை அம்மன் ஆலயத்திலிருந்து என் வீடு திரும்பி வந்த சமயம் சுன்னுகம் கழிந்து மருதனுர் மடச்சந்திக்கு அரைவாசி வழியில் எனது ஒரு நண்பரான பண்டிதரைச் சந்தித்தேன். அவர் தனது உண்மைக் கோலத்தைக் காணமுடியாதபடி மேல்சட்டை வேட்டி தொப்பி இவையெல்லாம் அணிந்திருந்தபடி சைக்கிளில் என்னை விலத்திக் கொண்டு எதிர்ப்புறமாகப் போய்க் கொண்டிருந்தவரை மின் வெளிச்சத்தில் காண முடிந்தது. நான் அவரை நோக்கி இதார் பண்டிதரோ என்றேன். அதுவேளை அவர் அங்கு நின்று ஓம் நீங்களே என்ருர். நான் கேட்டேன் இதேது பிரசங்கத்தால் வருகிறீர் போன்றிருக்கின்றது என்றேன். அவர் சொன்னுர் ஓம் வாரியார் வந்திருக்கிருர். அவர் கந்தபுராணம் பேசுவதாக அறிந்தேன். அந்த வகை கந்தபுராணத்து ஏதாவது தத்துவம் பேசுவார் என்று எண்ணிக் கேட்கப் போயிருந்தேன். இன்றெல்லாம் ''சூரன் பெற்ற பெருவாழ்வு'' என்றதைப் பற்றி விசேட உரை நிகழ்த்துவதாக இருந்தது, ஆனுல் அங்கு பார்க்கப்போனுல் விசேடமாக ஒன்றும் அதைப் பற்றித் தொடவில்லை. சேவலும் மயிலுமானது தான் பெருவாழ்வு என்று கூறி முடித்திருக்கின்ருர். நான் கேட்டு விட்டு வந்தேன் என்ருர். நான் சொன்னேன் ஐயா கந்தபுராணம் என்ருல் அது மேன்மை கொள் சைவ நீதியின் விளக்கமாகும். முருகப்பெருமானது திருவருளின் நிலையும் அதைப் பெறுவதற்கு உற்ற அடியார்களது சீலங்களையும் பரவலாகப் 10345 பாடல் மூலம் கந்தபுராணத்துக் கச்சியப்பர் தந்திருக்கிருர். அந்தச் சீலங்களை வாரியார் விளங்கிக் கொள்ள முடியாது. புன்நெறி தவிர்ந்து மேலாம் நன்னெறிப்பட்டு ஒழுகும் ஞானிகளே தமது வாழ்க்கை அனுபவத்தில் உய்த்துக் கந்தபுராணத்தின் தத்துவங்களை உணரலாம். அதுவன்றி வாரியார் ஓர் பிரசங்கி அவர் பணம் புகழ் தற்பெருமை இவற்ருல் பீடிக்கப்பட்டுள்ளார். ஆகையால் கந்தபுராணத் தத்துவங்கள் அவருக்கு எட்டாது. உங்களுக்குத் தானே தெரியும் சனமருள் சாத்திரமருள் என்பதின் அர்த்தம். அந்த நிலையில் மக்கள் வாரியார் பேச்சே கடவுள் வாக்காகக் கொள்ளலாம். வாரியாருக்கும் தெரியும் இங்கு தன்னிடம் பிரசங்கம் கேட்க வரும் மக்கள் கூட்டத்தின் மனுேநிலை. அதற்குத் தகுந்த மாதிரி அவர் பேசிப் போவர். இந்தச் சனங்கள் பாவம் ஒன்றும் தெரியாததுகள். ஏதோ அவருடைய பேச்சை அவர் இவர்களை இகழ்ந்து பேசினுலும் பெரிதென நம்புவார். ஆதலால் நாங்கள் இத்தயை போலிப்பேச்சில் எடுபடோம் என்றேன். அப்போது அவர் என்னை நோக்கி நீங்கள் சொல்வதில் உண்மை இருக்கிறது. வாரியாரது பேச்சில் யாழ்ப்பாண மக்கள் அறிவிற் குறைந்தவர்கள் என்ற எண்ணத்துடன் தான் அலர் பேசுகிருர் என்பது ஒருவாறு அவரது சில சில வார்த்தை மூலம் ஊகித்து அறியலாம். பெரும்பாலும் அவர் யாழ்ப்பாண மக்களை மட்டம் தட்டித் தான் பேசுகிருர். இதை அவர் பேச்சில் ஆர்வம் கொண்ட தெரும்பாலான மக்கள் உணர்வதில்லை என்ருர். நானும் அவரும் இப்படியாகப் பலகதைகள் பேசிப்பின்னர் பிரிந்து என் வீடு வந்தேன்.

ஒருக்கால் பாரும் யோகசுவாமி என்னிடம் ஒருவார்த்தை சொன்னவர். அது என்னென்ருல் இங்கு யாழ்ப்பாண மக்களுக்கு இந்தியாவிலிருந்து ஒரு தடிக்குச் சிவத்தச் சீலையும் சுற்றிப் பூமாலையும் போட்டுக் கொண்டு வந்தால் அதை உடன் இங்கு எல்லாரும் பெரிதாகக் கொண்டு பெரிதாகப் பேசி விழுந்து கும்பிட்டு பெரிதாகக் காசும் கொடுப்பார் என்றவர். பொதுவாக யாழ்ப்பாணத்தார் எல்லாரிலும் அயலாரை மதித்தலோ அல்லது தம் இனத்துள் ஒரு நற்பண்பாளரை மதித்தலோ இலாது பிறரை மதிப்பதில் விசேடகுணம் உண்டு.

இந்த ஒரு நிலைக்குக் குறுகிய மனப்பான்மையும் பொருள் அவாஞ்சையுமே காரணம். இதைத் திருத்துவது முடியாத காரியம். நாய் வாலை நிமித்துவது போன்றிருக்கும். அடுத்து வாரியார் என்னைக் கண்டவரோ எனக் கேட்டீர்; ஆம் அவர் நேற்று என்னைக் காங்கேசன்துறை வீதியில் சிவலிங்கப் புளியடியில் நம்மை உற்று நோக்கிய வண்ணம் சவர்க்கார முதலாளியின் காரில் சவாரியில் போனவர். பின்னுல் இரு கார் விரைவுடன் தொடர்ந்தன, முன்வந்த காரில் பனைக்கொடி படபடத்ததால் அதை நான் பார்த்தபோது முன் ஆசனத்தில் சிவத்தச் சால்வை போர்த்த வண்ணம் வாரியார் என்னைக் கூர்ந்து அவதானித்த வண்ணம் போவதைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது. நான் அப்பொழுது எனது துவிச்சக்கர வண்டியில் எதிரே வந்து 'கொண்டிருந்தேன். ஒருகால் என் வாரியார் கூர்ந்து பார்த்து உண்மை உணர்ந்து சிருந்தி தன் போக்கைத் திருப்பி பொன்னுல் கோபுரம் கட்டினுலும் கடவுள் வரார் அழுதால் கடவுள் வருவார் என்று சொல்லியிருக்கலாம். ஆனுல் இந்த அவருடைய வார்த்தை இவ்வளவு பணம் செலவழித்து அவரை வரவழைத்து இரவு பகலாக அவருக்கு தங்கள் ''பென்ஸ்''. காரை சவாரி செய்யக் கொடுத்து அவர் பாராட்டைப் பெற கோவில் திருப்பணிகட்கு என்று இலட்சக் கணக்கில் அள்ளிக் கொடுக்கும் பலதரப்பட்ட வியாபாரிமார் பாடு தான் என்னுதமோ தெரியவில்லை. வியாபாரி ஐயாமாரும் அவருடைய சமஸ்தான வித்துவான்களும் மணிபோல் பண்டிதர்களுக்கும் இந்த வார்த்தை கொஞ்சம் முட்டாக அமையுமோ தெரியாது. கோபுரங் கட்டக் காசு கொடுப்பது முதலாளிமாருக்குச் சுலபம். ஆனுல் முதலாளிமார் கடவுளை நினைந்து அழுவதென்ருல் அதற்கு நேரம் வருமோ தெரியாது. அவர்களது அன்ருடப் பிரச்சனைகட்குத் தீர்வு காண முடியாதபடி சங்கடப்படுபவர். அவர்கள் யமைதியாய் இருந்து ஒரு நிமிடமேனும் சிந்திக்க வாய்ப்பு வருமோ தெரியாது. வாரியாரும் கூட இனியாகிலும் அமைதியாய் இருந்து தான் உண்மையை மக்களுக்கு அன்ருகிலும் சொன்னபடியால் தற்செயலாகச் சொன்ன வார்த்தையாகக் கொள்ளாமல் உண்மையாம்படி நடப்பாரோ? அல்லது கணக்குக் காட்டாத காசில் கடவுட் தொண்டு செய்து பிரயோசனமில்லை. என்று அப்படி எல்லாம் பேசினீங்கள் என்ருல்''நான் அப்படிச் சொன்னேனு. சொல்லி இருந்தால் தப்புத்தான்'' என்று பெரிதாக்க அவரைக் கொண்ட ஆதரவாளரிடம் மெதுவாக விடை பெறும் போது சொல்வாரோ தெரியாது. எத்தனையோ பணம் படைத்த ராசாக்கள் அவர்க்கு துணையாக இருப்ப அவருக்கு எக்காலமும் என்ன குறை. இனிக் காணும் நான் போய் வருகிறேன் நேரமாகிவிட்டது எனக் கூறி என் நண்பரிடம் விடை பெற்றுச் சென்றேன்.

# மங்கையர்க் கரசியார் வாழ்ந்து காட்டிய நெறியே நம்மங்கையர்க் உகந்தது

## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் பெண்ணும் ஆணும் தேர் இழுத்தனர். ஆண்கள் ஒருவடம். பெண்கள் ஒருவடம். ஆனல புதுத் தேர் யாளி முறிந்துவிட்டது. காலமாற்றம் தேரில் காட்டியது. திருப் பணிச்சபையார் அகப்பிரமம் தீர்ந்து செம்மை உணர்வாரோ!

வீரமங்கையர் தேர்வடம் இழுத்தனர். ஆண்கள் கண்டு களித்தனர். சிவத்தமிழ் கலந்த திருப்பணிச் சபையார் அகப்பிரமம் பிடித்த புதுமைச் செய்கையில் புதுத்தேர் யாளி பொடிபட்ட சம்பவம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் நடைபெற்றுளது. பெண்களும் ஆண்களுடன் இணைந்து நேருக்கு நேராக போட்டி போட்டு இழுக்கலாம் என்ற புது மாதிரியான செயல் எப்படி அக்கோவிலில் வந்ததோ அறியோம். பொதுவாக பெண்கள் தேர் வடத்தை தொட்டு வணங்குதற்குத் தான உரியர் என்று சீலம் விளங்கிய பெரியோர் பால் கேட்டுள்ளோம். மன்தொட்டு நிகழ்ந்து வந்த சைவ நன்மக்களின் மரபும் அப்படித்தான். ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து முக்கித் தக்கி தேர் இழுக்கப் பழகின வேலை இப்பொழுது தான் ஆரம்பமானது. இந்த திருப்பம் இப்பொழுது வேறு கோவில்களிலும் நடைபெறுகின்றது இதைப் பார்த்து மற்றும் நல்லூர் முதலிய கோவில்களிலும் நடைபெறப்போகின்றது என நாம் சொல்லவேண்டியதில்லை. பெண்கள் ஆண்களாக சத்திர சிகிச்சை மூலம் மாறும் வேளையில் தேர் இழுக்க வேண்டாம் என்று யார் சொல்லமுடியும்? எனக்கு அதைப் பற்றி ஒன்றுமில்லை;

மபபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு அறியாமை பெருகத் தொடங்கிஞல். அந்தத் தொடக்கம் அது அடங்காப் பிடாரி போலத்தான் வேகப்டும் ஏதும் ஒன்றுக்கும் உதவாத மிலேச்ச நாகரீக விற்பன்னர் சிலர் முதல் பெண்களைக் கொண்டு சென்று கோவிலில் மேடை மீது இருத்திப் பொன்னுடை போர்த்தார். அன்றே சைவப் பெண்களது தூயவாழ்வில் மண் அள்ளிப் போட்டார்.

மிலேச்ச நாடாகும் அமெரிக்கா, இங்கிலாந்து இவை போன்ற நாடுகளில் பெண்கள் நிலேவேறு. அங்கு பெண் ஒருத்தி எத்தனை கணவனையும் திருமணம் செய்யலாம். அது அவர் நாகரீகம். அதற்கும் மிருகங்களுடைய நிலேக்கும் அந்த ஒரு தன்மையில் ஒத்தது.
ஆனல் எமது சைவநெறி அப்படி அன்று. ஒரு பெண்ணிற்கு கணவன் ஒருத்தன். அவன் அவள் வழிபடும் கடவுளிலும் மேலாவன் என்ற கோட்பாடு உடையது. இதனை நீதி பேசும் குறள் முதலியவையும் வேதம், ஆகமம் ஸ்மிருதிகள் வலியுறுத்தி உள்ளன. இதனல் கணவனே இழந்தால உடன்கட்டை ஏறல் கைமை நோன்பு என்ற உத்தமநெறிகளும் அந்நூல்களில் பேசப்பட்டன.

ஆனல் இன்று மிலேச்ச நாகரீகம் இடைப் புகுந்து எங்கள் பெண்களை அவல நிலேக்குக் கொண்டு வந்தது. பெண்கட்குரிய நான்கு குணத்தையும் போக்கடித்து மேடைக்குக் கொணடு வந்தது. தேவ சந்நிதானம என்ற மதிப்பே இல்லாது பெண்களைக் கோவில்களில் கண்டபடி அதிகாரம் செய்ய வைத்தது. பெண்களது பேச்சைக் விநம்பிக்க டவுள சநந்தானம் என்பதையும் மறந்து சிற்றின்ப நுகர்ச்சிகளில் வேடிக்கைகளில் பொழுது போக்கும் பேதையரான அந்தணரும் பேயரான சில கல்விமானகளும சீலம் இலாத அன்றிச் சீலம் அறியாத அடக்கம் இலாத பெண்களை வீராங்கனைகாக மதித்துச் சைவத்தை வளாபபவராக மதித்துக் கடவுள் திருமுன்பு கடவுளுக்கு செய்யாத மதுப்புககளைச் செய்யத தொடங்கினர். இதனல் சைவப் பெண் இனம் தனது கட்டுப்பாட்டைத் தளர்ததிக் கொண்டது. கோவில்களில் நாணமிலாறிக கூசசமின்றி ஆணகளுடன் நெரிந்து கொண்டு இணைந்துகொண்டு ஏன ஆணகளை இடிததும் தள்ளிக்கொணடு பெண்சிங்கங்கள் போல் நடமாடத தொடங்கினா. இந்த தொடக்கம் நாளடைவில் பெருகிப் பெருகி வந்து கோவில்களின் நல்ல நடைமுறைகளை ஆகமநெறிகளை அருட்தன்மைகனை அகற்றித் தங்களுடைய ஆணவச் செய்கைகளே புகுந்து கொளகின்றனா. கோவில் சந்நிதானத்தில் ஆண்களைக் கொஞ்சமும் மதியாது பேசல் வாதாடுதல் சரி பிழை பேசல் நீதி பேசல் இவை யாவும் பெறறு நாங்கள் ஆணகளில் குறைந்தவரோ எங்கட்கும் சம உரிமை உண்டென்று பாராட்டத் தொடங்கினர்.

நமக்கு இதனல் ஏதும் நட்டமில்லே. லெவ்வை இருக்கிருர். அவருக்கு எந்த உம்மா எந்த வாப்பாவோடு போவதில் அக்கறை இல்லே. அவர் அந்த உம்மாவையும் இந்த வாபபாவையும் திருமணத்தில் இணைத்துப் பறந்து தனது பணத்தைப் பெற வழி செய்பவரே ஒழிய உமமாவைப் பார்த்து உன் செயல் சரியோ என்று கேட்பது அவருடைய வேலே அன்று. அதே போன்று கோவிலில் இன்று சைவப் பெண்கள் நடந்து கொள்ளும் முறையும அவர்களைக் கீழ் நிலேயில் தள்ளி அவாகளது உயாநத சீலங்களேக கெடுத்திட முற்படும் இரண்டு மந்திர சுலோகம் மட்டும் தெரிந்த ஐயர்மாரையும் தம்பிரபன்களையும் சீலம் அறியாத சமயப பிரசங்கிகளையும் கோவில நிர்வாகம் என்ருல் தங்கள் பாடசாலேயில் அல்லது கந்தோரில் நடக்கின்ற தன்மை போலத் தான் அங்கு தூய்மை தேள்வையில்லே நாங்கள் நினேத்தபடி புதுப் யுது வேலைகளை முறைகளை ஆரம்பித்துச் செய்யலாம். ஆர் கேட்கிறது. கடவுள் வேண்டாமெனறு சொல்வாரோ என்னும் திருப்பணிச் சபையாரின் கொடிய செயல்களேயும் உற்று அவதானிக்கும் பொழுது வேதனையாக வருகின்றது.

நடந்து வரும் ஒழுங்குகளை நாம் மாற்றும போது மிகு அவதானத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் செயல் பட வேண்டும். ஓர் அரசியல இயக்கம் அல்லது சங்க இயக்கம் அல்லது களியாட்டம் நாடகம இநத இயக்கம் இவற்றில் செயல்படும் போது எப்படியும் நடக்கலாம். ஆனல் கோவிலில் அப்படிச் செய்ய முடியாது. கோவில் என்ருல் வழிபாட்டிற்கு உரிய இடம். வேறு சேட்டைகட்கு அங்கு இடமில்லே. மனம் ஒருமைப்பட செயல்படும் இடம். இந்த இடத்தில் மிலேச்சர் போன்று நீதி நியாயம் பேசுதற்கோ வாதாடுவதற்கோ இடமில்லே. தொன்று தொட்டு நீண்ட காலமாக நமது கோவில்களின் நடைமுறைகள் ஆகமங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை மக்கள் தம் மனதில் எட்டுணேயேனும் சிந்திக்கின்ருர் இல்லே. அவைகளை நன்கு தெளிந்து அதன் வழி கோவிலே நடத்த முற்படுவதானல் எல்லாருக்கும் நன்மையே பெருகுமன்றி யாருக்குமேனும் துயரம் வரமாட்டாது. ஏன் என்ருல் இப்படி கோவில்கள் ஆகம வழி நடத்தப்பட்ட காலங்களில் எங்கும் நன்மையும் சுபிட்சமுமே பெருகிக் கொண்டு வந்தன. ஆனல் இன்று ஆகம வழி குறைவு பட்டுள்ள காலத்தில் எங்கும் துயரப் பெருக்கமே காணப்படுகின்றது. இதனைச் சொல்லப் போனல் பலரும் நம்முடன் கோபிக்கின்றனர்.

அடுத்து பெண்கள் தேரில் வடம்பிடித்து இழுப்பது ஒழுங்கான காரியம் அன்று. பெண்களுடைய உடல் அமைப்புக்கும் பொருந்துவதன்று.
சயிக்கிலில் ஓடினர் கார் செலுத்துஞர் பிளேன் செலுத்துஞர் தர் இழுக்கக் கூடாதோ என்று கேட்டால் அதற்கு நேரடியாக என்னல் பதில் சொல்ல முடியாது. கார் வேறு சயிக்கிள் வேறு பிளேன் வேறு அவை இயந்திரங்கள் தேர் கடவுளுடைய இருப்பிடம்.

கடவுளை நாம் திருஉருவத்தில் அமைத்தே வழிபடுகின்ருேம். அவரின் உயர்வை எம்மால் சொல்லமுடியாது. ஞானமே உருவானவன். கற்பனைகட்கெலாம எட்டாதவன். இந்தப் பகவானை வழிபட்டு உய்யத் தான் கோவில் அதை அதற்குரிய மதிப்பையும் பயமக்தியையும் கொடுத்துத் தான் வழிபாடு செய்ய வேண்டும். கடவுளைக் கண்டு தெளிந்து உணர்ந்து உலகிற்கு நெறி வகுத்துப் போன பெரியோரது திருவாக்கியமே நமக்கு வேதமாவன மந்திரமுமாவன. விருப்பு வெறுப்பு இகழ்ச்சி புகழ் இவை யாவும் கடந்த உத்தமரே பெரியோர் எனப்படுவர். மக்கள் அவர் வழிப் பின்பற்றல் தான் நன்று. கோவில்களை மக்கள் விரும்பியபடி நடத்த முடியாது. ஏனெனில் கோவில்களைக் கட்டி வழிபாடு செய்வதன் நோக்கம் நாம் திருவருள் பேறு பெறுததற் காகவாம்.

ஒரு தொழிற்சாலேயின் நோக்கம் லாபம் பெறல் பொருள் உற்பத்தி. கலாசாலேயின் நோக்கம் கல்வி களியாட்ட வைபவம் இவை யாவன ஒரு அரசியல் கட்சியின் நோக்கம் நாட்டில் ஆட்சி முறை பற்றி தாம் வழி வகுத்தல் அதில் மக்கள் கூடிய படி எதனையும் செய்யலாம். அதனல் வரும் பெறு பேறுகள் உலகார்த்தமானவை.
ஆனல் கோவில் அப்படி அன்று; அது உலகார்த்த முடையதன்று மக்கள் தமது இச்சைப் படி செயல்பட முடியாது: அங்கு திருவருள் பெருக்கத்தைப் பெற தெளிந்த பெரியோருடைய வழிமுறைகளேயே நாம பின்பற்றவேண்டும்.

கொலே, வஞ்சனே கொடுமை, காமாதி குணங்கள் வேடிக்கை முதலிய பாதகச் செயல் கோவிலில் நடைபெற இடமே இல்லே. அங்கு வழிபாடு மட்டும் தான் நல்லாரும் கெட்டாரும் கிட்ட உள்ளாரும தூர உள்ளாரும் யாவரும் நன்னெறிப் பட்டு உய்தி அடைடவே அங்கு செல்கின்ருேம். அங்கு எமது வேற்றுமைகளை மறந்து நின்று ஏகமான தூய மனத்துடன் வணங்கிடற்காகவே முன்னைப் பெரியோர் சில ஒழுங்குகளை விதித்துள்ளனர், அந்த ஒழுங்குகளை நாம் புறக்கணித்து பிய்த்தெறிய முற்படக் கூடாது. இறைவன் சந்நிதியில் ஒழுங்கு தான் முக்கியம். ஆடு மாடு போல் நாம் தொழிற்பட முடியாது. மனிதன் கோவிலுக்குச் சென்று தான் தன்னிடம் நற்பண்புகளை வளர்க்கிருன். கோவில் சென்று வழிபடுவோர்க்கு மனம் புனிதமடைகிறது. புண்ணியத்தின் வசப்படுகிறது. ஆனல் இவற்றை எல்லாம் மறைத்து விட்டுக் கோவில் செல்வது வேடிக்கை செய்ய; விளேயாட வில்லுப்பாட்டு கேளிக்கைகள் சிறுசொற்கள்(பகிடிகள் அல்லது நக்கல்கள்) கேட்டுச் சிரிப்பதற்காக என்ருல் அது கோவிலாக இருக்கவும் முடியாது பின்னர் களியாட்ட மண்டபமாகவே திகழும், இதனை இன்றைய கோவில் திருப்பணிச்சபையாரும் எஜமான்களும் நினைக்கின்றனர் இல்லே. அவர்களுக்குக் கோவிலில் எந்தச் செயலேச் செய்ய என்ருலும் அதனல் காசு கோவிலிற்கு வருவதென்ருல் அந்தச் செயல் சீலமில்லாத செயலாக இருந்தாலும் அநுமதிக்கிருர்கள். கலியாணம் சினிமாப்படக் காட்சி பாட்டுக் கச்சேரி பிரசங்கம் லொத்தர் இவை மூலம் இன்று கோவிலுக்கு பொருள் சேகரிக்கத் திருப்பணிச் சபைகள் முற்பட்டு அதனல் கோவிலில் உள்ள புனிதம் நல் நிலேயாவும் கெட்டே விட்டேன. எந்த ஒரு திருப்பணிச சபையும் எஜமான்களும் கோவில் கருமம் செய்யும் போது அது கடவுளுடைய இருப்பிடம் அன்று எனவே நினைந்து தொழிற்படுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. பெரும்பாலான எஜமான்கள் திருப்பணிச் சபைகள் வஞ்சனை சூழ்ச்சி கொடுமை அகங்காரம் முதலிய கொடும் செயல்கள் நிரம்பி சில வேளைகளில் நீதித்தலம் சென்று அங்கு தமது பிடிவாதத்தை நிலேநாட்ட பல தில்லு முல்லுகளுடன் தொழிற்படுவதைக் காண்கிருேம். தாம் பிடித்தது சரி எனச் சாதிக்கின்ருரே ஒழியக் கடவுள் சந்நிதியிலும் இப்படி நாம் நடக்கலாமோ எனச் சிந்திப்பார் யாருமிலர். இந்த ஒரு விளக்கக் குறைவால் தெய்வத்திற்கோ வேதநெறிக்கோ மதிப்பின்மையால் இன்று பெரும்பாலான கோவில்களில் தொன்று தொட்டு நடந்து வந்த புனிதமுடைய ஒழுக்கங்களேயும் மக்கள் விடுத்துக் கண்டபடி நடக்கத் தொடங்கி விட்டனர். இதனுலே எமது சைவநெறி மிகவும் கீழ்மையான நிலேயில் வந்துள்ளது.

ஏதோ மேல் நாட்டவரில் ஹிப்பிகள் என்ற ஒரு வகுப்பினர் கண்டபடி நடக்க வெளிக்கிட்டுத் தாறுமாருக நடக்கத் தொடங்கினர்களாம். அவர்களின் அலங்கோல நிலே கண்டு ஆரெனும் ஏன் உப்பிடிச் செய்தீர் என்ருல் அப்படிச் செய்தால் என்ன தவறு என்றே கேட்பது வழக்கமாம். அதன் பின் அவரோடு கேள்வி கேட்டவர் என்ன கதைக்கலாம். அதே மாதிரித் தான் எங்கள் கோவிலில்களிலும் நடைமுறைகள் வருகின்றன. கேட்டால் பதில் அப்படிச் செய்தால் என்ன தவறு என்றே பதில் வருகின்றது.

இதே போலத்தான் சுவாமிக்கு லேற் அடியாதை என்ருல் அடிச்சால் என்ன பிழை? கோவிலில் கலியாணம் செய்யாதீர் என்ருல் செய்தால் என்ன தவறு. சுவாமியை எழுந்தருளப் பண்ணி இடையில் நிறுத்தி பிரசங்கம் வில்லுப்பாட்டு மலர் (புத்தக) வெளியீடு பிரமுகர்க்கு பாமாலே பூமாலே போடாதீர் என்ருல் நீரார் அதைக் கேட்கிறது? உம்மடை கடவுள் வேண்டாமென்று சொல்லுதோ? அது எங்கடை கோவில் செம்பில் உருவம் சீலத்துண்டால் சுத்திக் கொண்டு வந்து இடையிலே வைச்சு என்னவும் செய்வோம். நீர் அதைப் பேசமுடியாது என்றே கேட்கின்றனர். சில கோவிலில் குருக்கள் மாரையும் அவரது மோதகம் வடைக்காக ஆமா போடும் திருப்பணிச் சபை அங்கத்தவரையும் அவர் நடத்தையையும் நோக்கினல் காடையரையும் மிஞ்சிய காடையராகவே இருக்கின்ருர்.

இத்தகைய பாதகர்கள் இருந்து தொழில் புரியும் கோவில்களுக்கு வேத நீதியை விளங்கிக் கொண்ட எந்த ஒரு அறிவாளியும் கும்பிடப் போவாரோ? ஏதோ மக்கள் கோவில் என்ற பயபக்தியில் சில அலுவலேச் செய்கின்ருரே ஒழிய அவர்களுடைய உள்ளத்தில் இன்றைய பிராமண சமுதாயம் நடந்திடும் கொடுஞ் செயல்களை நோக்க வேதனையே கொள்கின்ருர் ஆனல் காடையரான அந்தணர்க்கு அதைப்பற்றி அக்கறையில்லே.

சில கோவில்களில் ஒரு சில ஐயர் மார் செய்கின்ற அநியாயச் செய்கையை நோக்கும் பொழுது அவரை அங்கிருந்து அகற்றும்வரை அந்தக் கோவில் தெய்வம் குடி கொளாது என்ற எண்ணமே வருகின்றது. பெரும் பாலாக இன்றைய பிராமண சமுதாயத்துள்ளவர் வேத நீதி என்ருல் பொய் புரளி பொருமை கபடம களவு இவற்றுடன் சம்பந்தப்படாதிருந்தால் தங்கள் பிழைப்பிற்கும் மதிப்பிற்கும் பங்கமேற்படும் என நினைக்கின்ருர். இதனுலே இப்படி இந்தக் கொள்கைகளைக் கொஞ்சம் கடைப்பிடித்தால் அது பெரும் புத்திசாலித்தனம் என நினைக்கின்ருர். இந்த நினைப்பால் மது அருந்துவோர் துர்குணர் வீணர் இவர்களுடைய சகவாசத்தைத் தான் பெரிதும் இவர்கள் விரும்புகின்றனர்,

இந்த வகை அந்தணர் சமுதாயத்து அரசியல் சேவகம் செய்வார் முதலிடம் வகிப்பதை நாம் நேரில் காணக்கூடியதாக இருக்கின்றது. பெண்கள் 'தேரில் வடம் பிடித்து உரமுடன் இழுக்க ஏன் கூடாது என்ற காரணத்தையும் ஆராய வேண்டும். பெண்களுடைய உடல் அமைப்பே மிருதுவான தன்மை உடையது. அவர்களை நாம் ஆண்களுக்கு அந்நிலேயில் ஒப்பிட முடியாது, பெண்கள் கருத்தரித்த சூதகம் முதலிய இயல்புடையவர். கருவுற்றிருக்கும் ஒரு பெண் இப்படியான ஒரு நிலேயில் தேர் இழுக்கப் போனல் கருச்சிதைவிற்குரிய நிலேயையுமே உருவாக்கும். அடுத்து மாதவிடாய் சமீபித்தவர்கள் இப்படியான வேலேகளைச் செய்தால் அவை உடலேத் தாக்கி

ம பு பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கோளாறுகளை உண்டு பண்ணவும் கூடும். ஆனதினுல் இத்தகைய முட்டான கடினமான வேலைகளை கோவிலில் பெண்கள் தவிர்ந்து கொள்வது கோவில் புனித நிலைக்கும் நன்று மற்றது அவர்களது நிலைக்கும் நன்று என்றே எமது முன்னைப் பெரியோர் பெண்களை கோவிலில் மதிப்புடன் வைத்தார். கூன் பாண்டியன் மனைவி மங்கையர்க் கரசியார் திருவாலவாய்க் கோவில் சென்று வழிபடுகின்றவ. அதனை சம்பந்தசுவாமிகள் தம் தேவாரத்து மொழிகின்ருர். அவவினுடைய பணிகள் யாதாயிற்று என்பதை பெரிய புராணம் தெளிவாகக் காட்டுகின்றது. சைவராகிய நாம் எமது சைவ மரபைப் பேணி அதன் படி ஒழுகுவதில் பெருமைப்பட வேண்டுமே ஒழிய பிறதேசத்து அல்லது பிறச் சமயத்து கொள்கைகளை நாம் பின் பற்றி எமது சைவநெறியின் ஒழுக்க முறைகளை மாற்றல் நன்றல்ல. இதை நம்மவர் யாவரும் தெளிந்து நடத்தல் தான் நன்று. பெண்கட்குரிய பெரும் தொண்டுகளாக பூக்கொய்தல் மாலை கட்டல் திருவலகிடல் மெழுகல் ஒதுங்காக நின்று வழிபடல் இவைகள் புனிதமாவன என்றே பெரிய புராணம் பேசுகின்றது.

இத்தகைய தொண்டுகளை எம்பிரான் சந்நிதியில் செய்தால் நன்மையே அவர்கட்கு என்றும் பெருகும். வேறு எந்த இடத்தில் பெண்கள் எப்படி நடந்தாலும் கோவிலில் மதிப்புடனும் மரியாதையாகவும் ஒதுக்கமாகவும் நடப்பதுசைவப் பெண்கட்கு மிக்கதொரு பெருமையாகும். அவர்கள் கோவிலில் பெறக் கூடியபாராட்டிலோ பட்டத்திலோ பூமாலையிலோ பதக்கத்திலோ இவை மிக மேலானதாகும்.

# கோவிலும் அடியாரும் குணங்களும்

## யோகசுவாமி வரலாற்றில் சிலமுடைய திருவருள் செய்கைகள் எழுதிக் காட்ட முடியாதன

### (தீபத்திற்கு அன்பர் உதவிய கட்டுரை)

உலகம் உவப்ப, அடியேங்கள் காணச் சிவமென நடமாடியவர் யோகசுவாமி; அவர் அருளால் நல்ல தொண்டு செய்து நன்னெறிபடர்ந்தோர் படர்வோர் பலரே. அவர் தம் திருப்பாதங்களுக்கு வணக்கம்.

ஒரு சித்திரை வருடப்பிறப்பின் மூன்று நாட்களின் முன்னர் ஆச்சிரமத்திலிருந்து சுவாமியுடன் அடியேன் பின் சென்றேன். அரியாலையில் சுவாமியின் அன்பர்களுள் ஒருவராகிய எஸ் ஆர் கந்தையா அவர்களுக்குச் சொந்தமான தென்னந் தோட்டமொன்றுளது. அத் தோட்டத்தில் அம் மூன்று நாட்களும் இருந்தோம் உலக நினைப்பின்றிச் சுவாமியுடன் அடியேன் இருந்தேன். சுவாமி தரிசனத்திற்குக்கு பகலும் இரவும் பக்தர்கள் பலர் வருவதும் போவதுமாய் இருந்தனர். அம் மூன்று நாட்களிலும் நிகழ்ந்த அற்புதச் செயல்களை அடியேன் மறப்பேனு? ஒன்றை அன்பாற் குறிப்பிடுகின்றேன் ஒரு நாள் காலைப் பொழுது நீ சட்டி பானையைக் கழுவு நான் விறகு கொத்திக் கொண்டு வருகின்றேன் என்ருர். சுவாமி விறகு கொத்தப் போவதை அடியேன் விரும்பவில்லை. தட்டிப் பேசவும் அச்சம். எனது பணியை நிறைவேற்றினேன். சுவாமியும் விறகைக் கொண்டு வந்து வைத்தார். இப்படி வந்திரு என்ருர் சந்நிதியில் அடியேன் அமர்ந்தேன். இன்று சமைக்க வேண்டாம் சிவன் செயலில் விடுவோமென்ருர் ஒன்றுமறியா நாயேன் மௌனமாகவிருந்தேன். புலித்தோலாசனத்தில் வடக்கு முகமாக இருந்தாங்கு இருந்த சுவாமி நண்பகல் பன்னிரண்டு மணிப்பொழுது கண்விளித்தார். பக்கத்திற் கிடந்த கிறு தடியொன்ருல் சுவாமி பசிக்குதென நிலத்தைத் தட்டினுர். அக்கணம் காரொன்று தோட்ட வாயிலில் வந்து நின்றது. ஒருவர் தம் வாழ்க்கைத் துணைவியுடன் உணவு கொண்டு வந்து கிணற்றில் கை கால் முகம் கழுவிப் பயபக்தியுடன் சுவாமியைக் கும்பிட்டு தாம் கொண்டு வந்த கையுறைப் பொருள்களை சுவாமி திருமுன்பு அர்ப்பணித்தார். இதற்கு முன்னர் சுவாமியிடம் தரிசனத்திற்காக அங்கு வந்து சுவாமியைத் தரிசித்த பின்னர் அங்கிருந்த அடியவர் ஐவரும் அமர்ந்திருந்தனர். ஆனுல் அங்கு சுவாமி சந்நிதியில் நைவேத்தியம் போன்ற பொருள்களில் வாழை இலைகள் ஏழு இருந்தன. அத்துடன் எழுவருக்கும் திருப்தியுடன் அருந்தக் கூடிய இடியப்பம் பல உணவுக்கு உகந்த கறிகள் என்பன இருந்த எழுவர்க்கும் ஏழிலைகளில் உணவு படைக்கப் பட்டது. விரிப்பிற் பெருகும்.

நான்காவது நாள் சுவாமி தோட்டத்தை விட்டுப் புறப்பட்டார் அடியேன் சுவாமியைப் பின் தொடர்ந்தேன் அரியாலைச் சந்திக்கு அருகாமையில் வரும் போழுது நடக்கவியலாதார் போல ஆனந்த பரவசராய் வீதியில் மேல் நோக்குடனிருந்தார். அடியேனும் அசைவற்று நின்றேன். பின்னர் எழுந்து நடவாமல் நடந்து ஆச்சிரமத்திற்கு வந்து சுவர்மீதிருந்த திறப்பினுற் கதவைத் திறந்து உட்புகுந்தார். அப்பிள் முந்திரிகை யாவாத் தோடை வாழைப்பழம் முதலாகிய பழங்கள் கற்கண்டு சனிற்ருேசன் மோட்டர் மில்க் முதலாயவை விஸ்கோத்து வகைகள் வேட்டி சால்வைகள் என்பன கட்டுக் கட்டாய் இருப்பதைக் கண்டார். ஒவ்வொன்றையும் உற்று நோக்குங்கால் பெரும்பாலானவற்றைச் சுட்டிக் காட்டிக் காட்டி இதைத் தூக்கு இதைத்தூக்கென அடியேன் அவற்றை எடுத்தெடுத்து வெளிவிருந்தையில் வைத்தேன். சிலவற்றை இது இருக்கட்டும் இது இருக்கட்டும் இவை சும்மா வைக்கப்பட்டவை. அவையெல்லாம் ஆசையால் வைக்கப் பட்டவை. திருநாவுக்கரசுவிடம் மண் வெட்டி வாங்கி வா வென்ன வாங்கி வந்தேன். ஆச்சிரமத்தின் தெற்குக் கோடியில் கிடங் கொன்று வெட்டென வெட்டினேன். வெளியில் வைக்கப்பட்டவற்றைக் கிடங்கிற் போட்டு மூடென மூடினேன். ஒரு சரை கருப்பூரந்தந்து அதன்மேல் வைத்துக் கொழுத்தெனக் கொழுத்தினேன். அப்பொருட்கள் மீது அடியேற்கு ஏற்பட்ட பற்றினுல் தாழ்த்தமைக்கு இரங்கி நிற்கும் போது இங்கே வாவென அழைத்தார். அடியேன் சென்றமர்ந்தேன். ஞான வாசிட்டத்தை எடுப்பித்து அதன் கதையை வாசி என வாசித்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தால் வையென்ன வைத்தேன். இதில் எங்களை எழுத முடியுமா? எனக் கேட்டார். நான் வாளாவிருந்தேன் இச்சந்தர்ப்பத்தில் அடியேற்குச் சுவாமி திருவாய் மலர்ந்தருளிய கதையை ஈண்டுக் குறிப்பிட நினைவு தூண்டுகின்றது.

## ஒருவரது பொருள் வழியே அவர் கன்மம் வரும்

### சிவனிடியார் கையில் கொடுத்த பொருள் சித்தித்தால் தீங்கு பல நீங்குவன.

ஒருவர் தரும் பொருள் வழி அவர் கன்மமும் வரும். சுண்ணுகம் சந்தையின் மாக்கெற் நிலம் அப்போது சீமந்து போடப்பட்டிருக்கவில்லை. மாரிக்காலம் நிலம் ஈரலிப்பாக விருந்தது அந் நிலத்தில் படுத்திருந்தேன். அதனைக் கண்ட ஒருவர் கட்டிலொன்றைக் கொண்டு வந்து வைத்தார் அதில் ஏறிப்படுத்திருந்தேன். அன்றுபகல் ஒருவர் தந்த நான்கு முழக் காரிக்கன் துணியை உடுத்திருந்தேன். விசரன் ஒருவன் அச்சந்தையில் உலாவுபவன். கறிக்கடையிற் கிடக்கும் கழிவு மீன் குடல் என்பவற்றைத் தான் அவித்துப் புசிப்பவன். அன்று நடுச்சாமம் அவன் என்னருகில் வந்து நின்று நான் உடுத்திருந்த துணியைக் கீலங் கீலமாகக் கிழித்தான். நான் எழுந்து அவன் உச்சிமயிரைப் பிடித்துக் கொண்டு அவனை அடித்தேன். அவன் ஓடிவிட்டான் அந்நேரத்தில் பகல் வேட்டி தந்தவனின் மனைவி இறந்தாள். அவள் உயிர் கவர்ந்த காலன் தான் இவ்விசரன் என்பது.

## ஆலயங்களும் அரனடியாரும்

விளக்கு நிறைந்தால் இருள் சூழும் அது போல அறிவு சோர்ந்தால் மும்மலங்கள் தலை தூக்கும் என அஞ்சி அவற்றை நீக்குதலும் அதற்குத் துணையாகிய மெய்யன்பரோடு பழகலும் அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் அரன் எனக் கண்டு வழிபடுதலையும் உடையவர் சீவன் முத்தர் எனச் சித்தியார் பன்னிரண்டாஞ் சூத்திரம் போதிக்கின்றது. செல்லப்பா சுவாமிகள் நல்லூரக் கந்தன் வீதியில் நடமாடியமை இதற்குச் சான்றளிக்கின்றது. அரன்மயமாகிய ஆலயங்கள் எவ்விதங் காட்சி நல்க வேண்டுமென்பதை சந்திர தீபம் விருப்பு வெறுப்பின்றி எடுத்துக் காட்டுகின்றது. ஐம்புலன்களுமொடுங்க மெய்மறந்து அயரா அன்பால் இறைவனை வழிபடும் இடமாக ஆலயங்கள் அமைதல் சாலச் சிறந்தது.

செல்லப்பா சுவாமி யோக சுவாமியையும் இன்னும் சிலரையும் பார்த்து சுவாமி கும்பிட உங்களுக்குத் தெரியுமோ? என்று கேட்டாராம். தாங்கள் ஒன்றும் பேசாது நின்ருர்களாம் வாருங்கள் நான் கும்பிட்டுக் காட்டுகிறேன் என்று தங்களையும் அழைத்துக் கொண்டு சென்று நல்லூர் வேலை உற்று நோக்கிய வண்ணம் நின்ருராம் சிறிது நேரத்தால் வேல பட படவென நடுங்கியதாம். உடனே வெளியே வரும்போது கோபுர வாயிலிற் சிரித்தாராம். சிரிப்பில் ஓர் அரைச் சோதி வடிவந் தோற்றியதாம். இதனை அடியேன் யோக சுவாமி சொல்லக் கேட்டேன்.

சமய குரவர்கள் சிவமாந்தன்மைப் பெருவாழ்வினைப் பெற்றவர்கள் அவர் போல வாழ்வைப் பெற்றவர்கள் மறைந்தாலும் தம்மை அன்பால், அறிவால் வழிபடுவோர்க்கு தோன்ருத் துணையாக நின்று அருள் புரிந்து கொண்டேயிருக்கின்ருர்கள். அவரெலாம் நித்தியர். இதனை அறிந்தவர் அறிவார். யோக சுவாமியின் குரு செல்லப்பா சுவாமி என்பதை அறிந்தவன்று தொட்டு அவர் கொட்டிலுக்கு இடைக்கிடை செல்வேன். அவருடைய கதைகளைச் சுவாமி சொல்லவும் அவரை அண்டித் திரிந்த கொழும்புத்துறை முன்னுள் விதானை சின்னத்தம்பி சி.துரையப்பா என்போரும் சகோதரி சின்னத்தங்கமும் மருமகன் சபாரத்தினமும் அரசடியிற் கடை வைத்திருந்த செட்டியார் ஒருவரும் இன்னும் சிலரும் சொல்லக் கேட்பேன். அவர்பால் அவர் சகோதரிபால் அன்பு வளர்ந்தது. சகோதரி சின்னத்தங்கத்திடம் சுவாமி அடியேற்கு அப்பம் வாங்கித் தருவார். அடியேனும் தனியனுகச் சென்று வாங்குவேன். அப்பம் என நினையேன் பிரசாதம் எனவே நினைவேன். அப்பம் புசித்திருக்கும் போது அம்மா சுவாமி எவ்விதமொடுங்கினுர் எனக் கேட்டேன். நிகழ்ந்ததைக் கூறினுர். செல்லப்பாச் சுவாமியின் நினைவுடன் வீடு சென்றேன். அன்றிரவு பத்துப் பதினெரு மணியளவில் திடீரெனக் காய்ச்சல் தோன்றியது. கண்ணயர்ந்து விட்டேன். கனவில் தோன்றி நான் தான் செல்லப்பன் நீ அவளைக் கேட்டாய். இப்போ உனக்குக் காய்ச்சல் வந்த மாதிரித் தான் எனக்கும் வந்ததெனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினுர் விழித்தேன் மனத்தால் அவர் திருப்பாதங்களைக் கும்பிட்டேன். அவர் இன்றும் உளார். என்றும் உளார். யோகசுவாமியும் கனவிற்ருேன்றி அருள் புரிகின்ருர். இதனை அன்பர் பலர் அறிவார்.

செல்லப்பரும் நானும் ஒரே ஆசனத்தில் இருக்கக் கனவு கண்டேன். ஆனுல் அக்கனவில் என் தலையில் தலைப்பாகை இருந்தது என யோக சுவாமி அடியேற்கு ஒரு நாட் கூறினர்.

**செம்மலர் நோன்ருள் சேர லொட்டா**
**அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மாலற நேய மலிந்தவர் வேடமும்**
**ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.**

ஓர் உண்மை நின்ற சிவனடியார் முன்பு எவ்வளவு பயபத்தியுடன் ஒழுகுகின்ருேமா? அவ்வளவு பயபக்தியுடன் ஆலயத்தும் ஒழுக வேண்டும் என்பது இதன் உட்பொருள். இதன் உண்மை விளங்கினுர் நமது கருத்துக்களை ஏற்று தத்தமது கோவிலை உயர்ந்த நெறியுடன் நடத்துவார் அல்லாதர் திருந்திடவேமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூகா என என் கிளை கூடி அழா போகா வகை மெய்ப் பொருள்

# பேசிய ஆறுமுகப்பெருமான்

### கலை இழையாற் கால் கட்டி, கைபிணித்து, கட்டில் மேல் கிடத்தி, வெள்ளை யாடை மேல் மூடி பாவையர் பலர் சூழ இருந்து அழுது புலம்பிட, காலன் உயிர் கொண்டோடா வண்ணம்; காத்தருளிட உண்மைப் பொருள் உணர்த்திய குருபரனே ஆறுமுகா என அருணகிரியார் அற்புதமுடன் போற்றிடுகின்ற நற்பொருள் உபதேசம்

## அவைதான் சீலமும் பத்திமையும் மீளாத அடிமையுமாகும். இதை இன்றைய உலக மக்கள் உணர்வாரோ?

தெளிவு பெற்று உறுதி கொண்ட பெரியார் சொல்லோ தெளிவுறாத பிரசங்கிமார் சொல்லோ உறுதி தரும் சிந்தியுங்கள். சிந்தித்து நன்னெறிப் படவாதல் முயலுங்கள்.

உலகில் இறைவன் உபதேசம் பெற்று உய்ந்த பெருமக்களில் அருணகிரியாரும் ஒருவர். அவர் முருகப்பெருமான் திருவருளால் உபதேசம் பெற்று உறுதி கொண்டவர். தனது பேற்றைத் தனது பெருமானைப் புகழ்ந்து பாடும் திருப்புகழில் மிகவும் அற்புதமாக மொழிகின்றார். அவை தான்''அவமே பிறந்த எனை இறவாது அன்பர் பணி அமுத ஆலயம் புகுத அருள்வோனே'' என்றும் கந்தரனுபூதியில் கூ கா என என்கிளை கூடி அழப் போகாத வகை மெய்ப்பொருள் பேசிய பெருமானே எனவும் போற்றுகின்றனர். இதன் தாற்பரியத்தை நன்கு நாம் சிந்தித்தால் இறைவன் உபதேசமே மரணத்தை நீக்குவது என நாம் தெளியலாம். இந்த உபதேசம் தான் யாது, அவை எப்படியாவன. என நாம் அறியமுடியாதிருக்கின்றது. திருவருளால் இவை தெளிவதன்றி கல்வியால் இவை பெறலாமோ என்பது சந்தேகத்திற்குரியது. இந்த வகை அருணகிரியார் திருவாக்கிலிருந்தே சில உண்மைகளை நாம் ஊகித்து அறியலாம். அவைதான் தந்தைக்கு முன்னம் தனியான வாள் ஒன்று சாதித்தருள் கந்த சுவாமி எனைத் தேற்றிய பின்னா காலன் என்னுடன் கோபித்து வந்து என் செய்யலாம். அவன் கோபமான திரிசூலத்தைச் சிதறிடத் துணிப்பேன் என்கிறார்.

நீல மயில் மீது ஏறும் பெருமான் எந்த நேரத்திலும் வருவான். அவன் சொன்னவை சீலமே! அந்தச் சீலத்தை மெல்லத் தெளிந்து அறிவார் தான் சிவ யோகிகள். அவர் தான் காலத்தை வென்றிருப்பார். ஏனைய வெறும் பேச்சாளர் மரிப்பார் அவர் வெறுங் கர்மிகள் என்கின்றார்.

கள்ளக் கடத்தல் மூலம் காசு கொடுத்து பிரசங்கம் செய்ய ஓம்பட்டு வந்து சேரும் பிரசங்கியள் பாட்டுக்காரர் சீலமுடையவரோ? சொல்லுங்கள் எங்கள் யாழ்ப்பாண மக்களே! வஞ்சனையால் தனக்கு வாய்ப்பானவரை தேவசன்னிதானத்தில் உசத்திப் பேசி கீச்சுக் கீச்சு தம்பலம் போல கோவிலில் நடைபெற வேண்டிய கிரியைகளையும் தனது பிரசங்கத்திற்காக பாட்டுக் கச்சேரிக்காக மாற்றிட பார்த்திருந்து தன் கருமம் பார்த்துப் போகும் இவர்கள் தானு சீலமுடையவர்? தயவு செய்து சொல்லுங்கள். இவர்கள் அருளுடையவரெனக் காட்டுவதானுல் இவர் வர வேண்டிய திகதிகட்கு வரமுடியாமல் போன காரணம் என்ன என்பதை நீங்கள் உணர்வீரோ?

நாயன்மார் எல்லாரும் குறித்தபடி நினைத்தபடி சொன்னபடி நிர்ணயித்தபடி தமது தொண்டினைச் செய்தார்கள். ஆனுல் அத்தகைய பெருமக்களுக்கு மதிப்புக் கொடுக்க மனமிலாத நீங்கள் இன்று இந்த சினிமாக்காரருக்கு கோவில் குடை பிடித்தீரே! தேரின் மீது ஏற்றினீரே. கும்பிட்டு விழுந்தீரே! இவை நயமுடைய செயலோ? சொல்லுங்கள். வெட்கத்தால் ரோசப்பட்டுக் கோபிக்காமல் உண்மைய உணர்ந்து இதன் தாற்பரியங்களை நன்கு தெளியுங்கள்.

நாயன் மார்கள் எல்லாருமே மரணத்தை வென்றவர். அது மட்டுமன்று இந்த உடம்புடனே சிவபதம் பெற்றவாகள். இவர்கள் பலருடைய வார்த்தைகளை உற்று அவதானிக்கும் பொழுது இவர்கள் யாவரும் இறந்தபின் இந்த உடலினைச் சுமக்க ஊரார்க்குச் சுமையாக்கேல் என்றவாறு இருக்கின்றது. இந்தப் பெருமக்களை மீட்பார் கூட்டம் என்று தாரளமாகச் சொல்லலாம். அதாவது மண்சரிவினுல் புதையுண்ட மக்களை மீட்டெடுத்துப் பார்ப்பார் போன்று இவரும் உலகத் துயரில் அவதியுற்று வேதனைப்படுவாரை மீட்டெடுக்க வந்த திருக்கூட்டம் எனலாம்.

மரணம் என்பது வேதனைகள் யாவற்றிலும் வேதனை, இந்த வேதனை தாங் கொணுதது. அங்கால் நிலை ஒரே பயங்கரமோ வேதனையோ அல்லது எப்படி எப்படியோ அறிய முடியாது. இங்கால் தனது மனைவி மைந்தர் வாகனம் உறவு அன்பினர் நண்பர் இதுகாறும் இனிதுடன் பழகி வந்து இன்று பிரிகின்ற நேரம் அது மிகு வேதனையைத் தரும். பார்வை குன்றும் கேட்டல் முடியாது நா எழாது படுக்கையிலும் கிடக்க முடியாத படி ஒரே உளட்டல். என் செய்யலாம் இந்த நேரம் கொஞ்சம பஞ்சால் முலைப்பாலைத் தோய்த்து நாக்கிலே தடவுவார். இது கண்டு ஐயோ என்பாரும் எனது அப்பா என்பாரும் என்ரை ராசாவே என்பாரும் அயலவரும் பிறரும் வந்திருந்து கூக்கிரலிட்டு கத்திட கத்திக் கத்தி தொண்டைகார இப்படியான ஒரு நிலையில் தான் மக்கள் இவ்வுலகை விட்டுப் பிரிவார்கள். பிரிந்து கொண்டிருக்கின்றனர். இன்னமும் பிரிவார்கள். இப்படியான ஒரு சூழ்நிலை மரணத்தறுவாயில் என்றுமே சம்பவிப்பது. இது கண்ணுல் காண்பதற்கு மிகுந்த வேதனை உடையதாக இருப்பது இத்தகைய ஒரு நிலையில் தான் நம் மரணம் வந்து சம்பவிக்கின்றது. இவை எம் கண்ணுல் காணும்படியான காட்சிகள் உயிர் போன பின் அவ்வுயிர் எப்படியானதென அது அறிந்திடக் கூடியது அன்று ஆனுல் திரிகால உணர்ச்சியுடைய பெரியோர் ஏதோ

**"விடாய் படக் கூற்றுவன் ஊர்க்குச் செல்லும் வழியும் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே"**

எனவும்

**நம்பொருள் நம் மக்கள் என்று பெரும் இச்சைப் பட்டு வாழ்ந்தீராயிருந்தால் அங்கால் உமக்கு அழக்கொணுத துயரம் வந்து சம்பவித்திடும்**

என்றும்

**நரகப்படுகுழியின் வேதனைகளும்**

இயம தூதர் வந்து நெருங்கி மையல் கொண்டு உலகில் ஒரே பழுது செய்த வப்பன் என்றும் துயரப் படுத்துவார் அடிப்பார் உதைப்பார் என்றெல்லாம் சொல்லி வைத்தனர். ஆதலினுலே அறிவு கூடிய ஒவ்வொருவருக்கும் அவர் எந்த விஞ்ஞானியாகவும் இருக்கலாம் அல்லது எந்த நுட்பமுடைய வேந்தராகவும் இருக்கலாம் அவர்கள் எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு பொருள் உண்டு. அது தான் இருட்டும் ஒளியும் சமமாக இருக்கிறது. இந்த ஒரு நிலையை நாம் உணர்ந்து கொண்டால் இவ்வுலகில் எவ்வளவுக்கு வாகனம் வீடு மக்கள் மனைவி என்று அழுந்தினேமோ அவ்வளவுக்கு அவ்வளவு துயரம் உண்டு அங்கால் என்பதை ஏற்றுக் கொள்ளவே வேண்டும். இதை யாரும் மறுத்துரைக்க முடியாது. இந்த ஒரு உண்மையைத் தான் நமது பெரியோர்கள் இவ்வுலகில் தவத்தின் சிறப்பால் மூன்று கால உணர்ச்சி பெற்ற முனிவர்கள் சொல்லி வைத்துப் போயினர். அவர்களது கூற்றை அறியாமையில் எழுந்த வாக்கியம் அல்லது வெறும் கற்பனையால் எழுந்த வாக்கியம் என்று நீக்கிவிடவும் முடியாது.

இந்த வகையாக மரணம் நமக்குச் சம்பவித்திடாமல் ஊரார் விழுந்தழாமல் பாதுகாக்க மெய்ப்பொருள் பேசினுன் குருமணியான ஆறுமுகப்பெருமான் என்கின்றார் அருணகிரியார் எம்பிரான் அருணகிரியின் இந்த வார்த்தை இவ்வுலகில் பிறந்து மொழி பயின்று அதன் மூலமாகத் தனது காதலை இறைவன் பால் செலுத்தி நிற்கும் அடியவர் கூட்டம் சிந்தித்தேயாக வேண்டும்.

இந்த உலகம் கலியின் வசத்தில் அமைந்தது. கலியின் உடைய வேகம் உண்மையை மக்கள் உணர முடியாதபடி தடுப்பது. ஒரு பெண் தனது எழிலால், பேச்சால், பார்வையால், நடத்தையால் மேல் நெறி நின்றாரையும் கீழ்நிலைக்கு இழுத்து விடும் தன்மை போன்று கலியும் இன்றைய உலகில் எத்தனையோ விதமான இயந்திர சாதனங்களால் நுட்பக்கருவிகளால் உலக மக்களை மயக்கியே திரிகின்றது. இந்த மயக்கம் சதா வளர்ந்து கொண்டே போகின்றது. இந்த மயக்கத்தினின்றும் யாரும் விடுபட முடியாது. ஞானம் பேசுவார் கோலம் காட்டுவார் பேடை மீது இருந்து எல்லா வித்தையும் செய்வார்கள் அவாகளும் இதற்குள் அம்பிட்டுக் கொண்டனர். இந்த அகப்படுதலினின்றும் நீங்க முடியாது. எத்தனையோ பிரசங்கங்கள் நடந்தன பேச்சுக்கள் நடந்தன எல்லாம் சிறப்பாக இருந்தாலும் உய்தி அடைந்தார் யாரும் உண்டோ என்றால் அது தான இல்லை இப்படியான ஒரு சூழ்நிலையிலே அருணகிரியார் மட்டும் தமது அனுபூதியில் என்கிழை(சுற்றம்) கூடி அழும்படி நாம் மரணித்து போகா வகை மெய்ப் பொருள் பேசிய பெருமானே என்கின்றார்.

அருணகிரியாருடைய சரித்திரம் பிரசங்க மூலம் சரித்திர மூலம் கேட்கலாகின்றது. ஆனுல் அவருடைய உன்னத நிலையைப் பற்றி உணர்ந்து கொள்ளும் மனிதர் மிகு குறைவே. அருணகிரியார் இவ்வாறுக தாம் பெற்ற இந்த அழியாப் பேற்றை உலக மக்களும் பெறலாகும். அதற்காக எங்கும் ஒடிப்போகத் தேள்வையில்லை. அவை தான் மனத்தை ஆடம்பரங்களில் செல்லாதபடி தடுங்கள் கோபத்தை விடுங்கள் என்றும் யார்க்கேனும் இயன்றளவு தானம் கொடுங்கள். இருந்த மாதிரி இருக்க முற்படுங்கள். ஏற்றத் தாழ்வில் சங்கடமுறுதீர். அப்படியாக இருந்தால் ஆறுமுக ஐயன் அருள் உங்களிடம் தாமாக வந்து வெளிப்படும்.

பிறப்பு இறப்பு துயரம் துக்கம் அனைத்தும் இலாத பேரானந்தத்தை நீர் அவனருளால் பெறலாகும் என்கின்றார்; ஆதலின் தருமமும் தவமும் கடவுளைக் காட்டுமன்றோ? பிறகு ஏன் அஞ்சுவீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபத்திற்கு வாழ்த்துக்களும் அறவுரைகளும்

தம்பி!

திருவருட்செல்வப் பேற்றை யுடையீர் நீர். சந்திர தீபம் சைவ உலகில் பிரகாசிப்பதைக் காண்பதில், அருட்குரு நாதனையும் அடியேன் உளங் காண்கின்றது. ஆரா அன்புடன் தீபத்தைத் தழுவுகின்றேன். வெப்பத்தை அகற்றி உள்ளத்தைக் குளிரச்செய்கின்றது. மெய்மையைத் துணிந்து கூறுவதற்கு அஞ்சார் அறிஞர். எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணும் உண்மை உணர்வையுடையோர்க்குப் பகைவர் யார்? நட்பினர் யார்?

ஈசனுக்குஅன் பில்லார் அடியவர்க்குஅன் பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும்அன் பில்லார்
பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கில்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ
ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு
அவர்கருமம் உன்கருமம் ஆகச் செய்து
கூசிமொழிந்து அருள்ஞானக் குறியில்நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே

எனச் சிவஞான போத வழி வந்த சித்தியார் எம்மைப் பார்த்துக் கூறுகின்றது.

காமுகனொருவன் தனது ஆசைக்கிழத்தியுடன் வைத்திருக்கும் அன்பு எவ்வளவு என்பதை அவ்வனிதையின் சுற்றத்தாரைக் காணுங்கால் அவரிடத்து வைக்கும் அன்பால் அறியப்படும். அதுபோல மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டு அரன் மலரடிக் கீழிருப்போர் அதனை வளர்க்குங் குணமுடையாருடன் இணங்குவதில் பேருவகை கொள்வர். அதனைக் கெடுக்கும் இயல்புடையாருடன் இணங்குவதில் பெரும் வெறுப்புக் கொள்வர். இது அவர்தம் இயல்பு என்ப.

யோக சுவாமியுடன் நெருங்கிப் பழகப் பாக்கியம் பெற்றவர்களுள் அடியேனும் ஒருவன். சுவாமியின் ஆச்சிரமத்தில் அமைதி தவழ்ந்து கொண்டிருக்கும். உளத்தின் அறியாமை அகல அமைதி நிலைபெறும். சுவாமியை அண்டிப் பிழைக்க அருள் பெற்றோர் இதனைத் தாமே அறிவர்.

ஒருநாள் அடியேன் சுவாமியின் சந்நிதானத்தில் சுவாமி மீது அன்பை அப்பெருமானருளால் வளர்த்த வண்ணம் வாளாவிருந்தேன். யேர்மன் சுவாமி இருவருடன் சுவாமியைத் தரிசிக்க வந்தார். அவர்களும் அடியேன் அருகில் அமர்ந்தனர். அவர்களில் ஒருவர் ஆங்கிலேயர். அவரை யானைக்குட்டிச்சாமி என்றார். மற்றவர் அவுஸ்திரேலியர். அவரை நரிக்குட்டிச் சாமி என்றார். கேளாமற் கேட்ட சுவாமி மௌனம் நீங்கி ஆவேசமுடையார் போல் ஜேர்மன் சுவாமியை நோக்கி வீணுக இந்தப் பையன்களை ஏன அலைக்களிக்கின்றாய். நீ உன்னை இரட்சிக்கவில்லையே. இவர்களை இரட்சிக்க உன்னால் முடியுமா? குருடன் குருடனுக்கு வழி காட்ட முடியுமா? எழும்பிப் போவென ஏசி அகற்றினார். இருவருள் ஒருவராகிய ஆங்கிலேயர் சோல் பரிபிரபுவின் மகனாவர். இவர் ஜேர்மன் சுவாமியின் தொடர்பினின்றும் அன்றே அகன்றார். இருவினையொப்பும் மலபரிபாகமும் திருவருளாற் பெற்றவர் ஆகலின் யோகசுவாமியையே தஞ்சமென்றடைந்தார். சுவாமியின் அருள் பெற்றார். சுவாமியால் அபிடேகம் செய்விக்கப் பெற்றார். தந்தசாமி என்னும் பட்டத்தைப் பெற்றார். தன்னை அறிந்தார். சில ஆண்டுகள் மட்டக்களப்புச் செங்கலடிச் சிவதொண்டன் நிலையத்திருந்து தமது வாழ்வைச் சிவதொண்டுக்கே அர்ப்பணித்தார். உள்ளத்துறவியாய் அவ்வூரில் செய்த தொண்டின் பெருமையை அடியேனால் உணரவும் முடியாது.

உலகில் மக்கள், அறநெறி ஒரீஇ, மறநெறியினைத் தழிஇ, அறிவிலிகளாய் வாழுங்காலங்களில் அவர்தம் அஞ்ஞானவிருளை அகற்ற, இறைவனே எம்முருவில் தோனறுகின்றான். காலத்துக் காலந்தோன்றிய மெய்ஞானப் பெருமக்கள் பலர் கிழக்கில் அவதரித்தமையை நாமறிவோம். அவர்களைக் கடவுளர்களாக மதிக்கின்றோம். வணங்குகின்றோம். அவர்தம் திருவாய் மொழிகளை மறைமொழிகளெனப் போற்றுகின்றோம்.

சென்ற நூற்றாண்டுகளாக எம்மவர் பலர் மேல் நாட்டாரின் நாகரிகத்தில் மோகங் கொண்டார். சமயநெறியைக் கைவிட்டார். அடிமைவாழ்வை அமரர் வாழ்வென நயந்தனர். அந்தோ இவர்தம் அறியாமைக் கிரங்கி' இவர்தமையெலாம் தெய்வநெறிப்படுத்த யோகசுவாமி வந்தருளினார். முக்கால உணர்வுடையவர் யோகசுவாமி. அவனே தானாகியவர். தன்னை இரட்சித்தவர் பிறரையும் இரட்சிக்கும் பேராற்றல் உடையவர். இப்பிறப்பில் அவர்தம் திருவுருவை நேரில் கண்டு களிக்கவும் வழிபடவும் வாய்ப்புக் கிடைத்தோரெலாம் பாக்கியவான்களே. அவருள்ளிருந்து வெளிவரும் மறைமொழிகள் உயிருடையவை. தளர்வகற்றித் தழைக்க வைக்குந் திறத்தன. அப்பெருமானார் திருவருளால் சிவதொண்டன் உதித்து நல்ல தொண்டு செய்து வருகின்றது. சந்திரதீபமும் அவனருளால் உதித்தது.

வழிபடச்செல்லும் அடியவர்களுக்கு இறைவனிடத்து அ... பையும்' அறிவையும் வளர்க்கும் இடமே ஆலயம். ஆலயத்தில் அமைதி தவழவேண்டும். மங்கலதீபங்கள் மலர்ந்தொளிர வேண்டும். மங்கலவாத்தியங்கள் மனசை ஒருமுகப்படுத்த வேண்டும். மெய்யடியார்கள் இவ்வண்ணம் வாழ்ந்தார்கள் என எம்மனோர்க்குக் கூறும் பெரியபுராணம் போன்ற புராணங்களின் படிப்புக் காலத்துக்குக் காலம் நடைபெறவேண்டும். ஓதல் வேண்டும். உணரவேண்டும். உய்யவழி காணவேண்டுமன்றோ?

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொருமூன்றும் திருந்து சாத்து விகமேயாக
இந்துவாழ்சடையனாடும் ஆனந்தன் எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலாமகிழ்ச்சியில் மலர்ந்தார்

எவர்? எம்பெருமானின் அணுக்கத் தொண்டராகிய எம்பெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகள். அப்போது அப்பெருமானார் கும்பிட்ட நடராஜப்பெருமானின் திருவுரு அமைந்த ஆலயம் எவ்விதம் அழகொளியையும் அமைதியையும் வளர்க்கும் இடமாக அமைந்திருக்க வேண்டுமென்பதை அகக் கண்ணாற் காண முடிகின்றது.

நாமார்க்குங் குடியல்லோம்; நமனையஞ்சோமெனும் முதலையுடைய அப்பர் சுவாமிகளின் தேவாரத்தை வாய் வழுத்துகின்றது. மனம் பல நினைக்கின்றது பேச்சு பழகிய கிளி பூனையைக் கண்டால் கீசுக் கீச்சு என்பது போல மேடையிற் பேசும் எம்மவர் உளம் ஆபத்து வருங்கால் நடுங்கும் அன்றோ?

நாடறிய நல்லதொண்டு செய்யும் உயர்திரு. நல்லையா வெனும் மெய்த்தொண்டரே! திருவருட் சக்தியால் தாங்கள் அயராது உழைக்கின்றீர்கள். சமயகுரவர்களின் வாழ்க்கை நெறியை வளமுறக் காட்டும் பெரியபுராணத்தைப் படனம் செய்யும் பண்பாடு அருகிவரும் இந்நாளில் தங்கள் சந்திரதீபம் வளம்பெற வளர்க்கத் தொடங்கியுள்ளமை கண்டு பெரிதும் மகிழ்கின்றேன். தங்கள் தலைவன் சித்தம் எதுவோ அதுவே தங்கள் சித்தம். தோன்றாத்துணையாய், உயிர்க்குயிராய், நினைவுக்குநினைவாய், அறிவுக்கறிவாய்த் தங்களைத் தளரவிடாது காக்கவல்லான் அவனே. இதனைத் தாங்கள் நன்கு உணர்வீர்கள்.

''அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்சவருவதுமில்லை''.

சகோதரன்
வை. வல்லிபுரம்

---

# சந்திர தீபத்திற்கு எமது ஆசியுரை

சந்திரதீப ஆசிரியர் அவர்கட்கு

ஆகாயத்தில் பல்லாயிரம் நட்சத்திரங்கள் இருந்தும் சந்திர ஒளியே மிகவும் பிரகாசமானது. நம் ஈழநாட்டிலும் பல பத்திரிகைகள் தோன்றி ஒடுங்கிப் போய்விட்டன. அதில் ஒன்று வித்தகம் எனப்படும். அந்தப் பத்திரிகை மூன்று ஆண்டுகளே நீடித்தது. அந்த மூன்றாண்டுகளுக்குள்ளும் செய்த தொண்டு அளப்பரியது. பண்டார சன்னிதிகளின் முறையீனங்களைக் கண்டித்து விழிக்கச் செய்தது. போலிச் சைவத்தைக் கண்டித்து உண்மைச் சைவத்தை நிலைநாட்டியது. அதில் பல கண்டனங்களும் கஷ்டங்களும் வந்தபோதும் பல எதிர்ப்புக்களுக்கும் சலியாது மூன்றாண்டுவரை உண்மைச் சைவத்தை நிலைநாட்டிப் போயிற்று. தங்களால் ஆரம்பித்த சந்திர தீபம் ஓராண்டு முடிவதற்கிள்ளேயே ஆலயங்களில் நடைபெறும் களியாட்டு விழாக்களையும், தாசி நடனங்களையும், சிற்றின்பத்தை ஊட்டும் பொப்பிசைகளையும், போலிக்குருக்கள் மாரின் குற்றங்களையும் எடுத்துக் கண்டித்து அவர்களை நல்வழியில் சென்று சைவசமூகத்தின் வேற்றுருக்களை போக்கி நன்னெறியைப் பிரகாசிக்கச் செய்து வருவதைக் கண்டு நாம் எல்லோரும் சந்திர தீபம் பல்லாண்டு வாழ்க வாழ்க வாழ்கஎன வாழ்த்துகிறோம்!

சிவாகம சைவம் செழித்து வாழ்க!

இங்ஙனம்

உங்கள் உண்மை நெறியை கண்டு உங்களையும் சந்திரதீபத்தையும் வாழ்த்தும் சிவாகம பாஸ்கரபூஷணம் சிவ கைலாயக்குருக்கள்

---

# செல்லப்பா சுவாமி செய்த திருவருள் அற்புதம்

முன்னர் காலத்து பிரசவமாகும் பிள்ளை வயிற்றில் சிலதடையால் சிக்குண்டால்; கால் தலை மாறிக்கொண்டால்; அத்தகைய பிரசவம் மிகு வேதனையானது. அத்துடன் ஆபத்தானது. அதனால் பெரும்பாலும் முன்னைய மக்கள் தமது ஒரு பெண் பிரசவம் முடியும் துணையும் தெய்வத்தின் திருவருளையே வேண்டி நிற்பர். அத்தகையதான ஒரு நிலையில் அக்காலத்து சத்திர சிகிச்சை முறை தெரிந்தவர் இலாததால் பெரும்பாலும் பிரசவத்தில் இத்தகைய சிக்கல் நேரும் தோறும் அப்பிரசவம் துக்கமாக முடிவதுண்டு.

இப்படியான சிக்கலான ஒரு பிரசவ நிலை ஓர் அன்பரின் மனைவிக்கு வந்து கொண்டது. அக்கால் அந்த ஒரு நிலையில் பிரசவ நோக்காடு துவங்கிப் பல மணி நேரமாயும் குழந்தை பிறவாதிருப்ப வைத்தியர் வந்து பார்த்தும் மருந்து கொடுத்தும் அக்குழந்தையைப் பிறப்பிக்க முடியாது போயது. வைத்தியரின் நிலையையும் தம் மனைவியின் துயரையும் கண்டு சகிக்கமுடியாதபடி அவள் கணவன் நல்லூருக்கு ஓடினான். தேர்முட்டிப் படி மேலே செல்லப்பா சுவாமிகள் வீற்றிருப்பதைக் கண்டான். அவருக்கு கிட்டப் போக மறுவேளை யாரும் அஞ்சுவர். இவனுக்கு அன்று தனது துயரத்துல் பயமே தெரியவில்லை. ஓடிப்போய் செல்லப்பர் திருவடி முன் வீழ்ந்து காலைக் கையால் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறத் தொடங்கினான்.

ஐயோ எனக்கு ஒரு முடிவு சொல்லு. எனக்கு ஒருதரும் துணையில்லை. என் மனைவி பிள்ளைப் பெற முடியாது தவிக்கிறாள். நான் என்ன செய்ய என்று கதறினான். காலை விடடா விடடா என்று ஏசினார் செல்லப்பர். அவன் விடவில்லை. கருணைக் கடலான அவரது திருவுள்ளம் அவன் மீது இரங்கியது. சரி ஓடிப்போய் ஒரு பாய் கொண்டாடா என்றார். அவனும் ஓடிப்போய் பாய் கொணர்ந்தான். அதை நிலத்தில் விரியடா என்றார். அதில் தான் போய் படுத்தார் பிள்ளைத்தாய்ச்சி வேதனையால் புரள்வது போலத் தாமும் புரண்டு இரண்டு தரம் முக்கி எழுந்து அவனைப் பார்த்து ஓடடா வீட்டை அங்கை எல்லாம் சரி என்றார். கும்பிட்ட கையுடன் அன்பன் வீட்டிற்கு ஓடினான் குழந்தை சுகமாகச் சிக்கு நீங்கிப் பிரசவித்திருந்தது கண்டான். உடன் கையையும் தலைமேற் கூப்பி ஆனந்தக் கூத்தாடி மகிழ்ந்தான். இந்தத் திருவருளின் செயலை எந்தப் புராணத்தால் பாடலாம் எப்படி எழுதலாம்.

---

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கைமணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு. வை. நல்லையா அவர்களால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org